பொதுசன நூலகம்
21 MAY 2004

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 01 (21.05.2004) வெள்ளிக்கிழமை இதழ் :232

## மீளவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான

# இறுதிக்கட்ட கலந்துரையாடலுக்காக

# சொல்ஹெய்ம் கொழும்பு வருகின்றார்!

## இடமும், திகதியும் தீர்மானிக்கப்படும்

(கொழும்பு)

**நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு வந்து - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான இறுதிக்கட்ட கலந்துரையாடல்களை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிய வருகிறது.**



எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரும் எரிக் சொல்ஹெய்ம் - அன்றைய தினமே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்துப் பேச்சுக்களை நடாத்துவார்.

இதன் பின்னர் 26 ஆம் திகதி புதன் கிழமை கிளிநொச்சிக்கு விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் செல்லும் எரிக் சொல்ஹெய்ம் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முக்கிய செய்தி ஒன்றை புலிகளின் தலைமைப் பீடத்துக்குக் கொண்டு சென்று கையளிப்பார்.

இந்தச் செய்தி குறித்த புலிகளின் பதிலுடன் கொழும்பு திரும்பி- மீண்டும் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து - சமாதான முயற்யின் இறுதிக்கட்ட நிலவரங்கள் குறித்து எரிக் செல்ஹெய்ம் விளக்கிக் கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் நடவடிக்கையின் போது 4 கடற்கரும்புலிகள் வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த 2002 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி - தமிழீழ கடற்பரப்பில் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் பாண்டியன் (முத்துக்குமார், கணபதிப்பிள்ளை கரடியனாறு கொலனி - மட்டக்களப்பு)

கடற்கரும்புலி மேஜர் சூரியன்/ சூரி (நாகேந்திரன் கமலேந்திரன், இல 338, பிரதான வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலி மேஜர் அச்சுதன்/வாதீசன் (கணேசன் ஜெயக்குமார்- சொந்த முகவரி இல 116, கொக்குவில் கிழக்கு, தற்போதைய முகவரி விஜி வீதி, முழங்காவில் மன்னார்)

கடற்கரும்புலி மேஜர் அறிவுச் செல்வன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறையில் அப்பிள் வியாபாரி இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறைப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முஸ்லிம் வியாபாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

சாய்ந்தமருது கடற்கரை வீதியைச் சேர்ந்த அப்பிள் பழ வியாபா

தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்களில் வந்த இருவர் இவரது கடையில் வைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்ட அப்பிள்பழ வியாபாரி, தனது கடையில் கஞ்சாவை இரகசியமான முறையில் வைத்து விற்பனை செய்து

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் புலிகளின் விமானம் பறந்ததா?

விடுதலைப் புலிகளால் இரணைமடுவில் அமைக்கப்பட்ட ஓடுபாதையில் இருந்து புறப்பட்டதாக கருதப்படும் விமானமொன்று முல்லைத் தீவுக் கடலுக்கு மேலாக கடந்த திங கட்கிழமை இரவு பறந்ததை கடற்படையினரின் ராடர் திரையில் அவதானிக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

இது தொடர்பாக- கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

### கடற்படை ராடரில் தெரிந்ததாம்

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு கிழக்கு கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படைப் படகு ஒன்றின் ராடரில் மர்மமான வான்கலம் ஒன்று பறந்து கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து கடற்படைப் படகில் இருந்து கடற்படைத் தலைமையகத்துக்கு இது குறித்து தகவல் அனுப்பப்பட்டது.

முல்லைத்தீவுக் கரையிலிருந்து கடலை நோக்கி சுமார் 12 கடல் மைல் தூரம் பயணம் செய்த இந்த மர்ம வான்கலம் பின்னர் முல்லைத் தீவுக் கரையை நோக்கி திரும்பிச் சென்று ராடரில் இருந்து மறைந்தது.

சுமார் 150 நொட்ஸ் வேகத்தில் இந்த வான்கலம் பறந்ததை ராடர் அவதானிப்பின்மூலம் கடற்படையினர் உறுதிசெய்தனர். இது ஹெலிகொப்ரர் அல்லது செஸ்னா வகை விமானங்களின் பறப்பு வேகத்துக்கு இணையானதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன்னம்

கத்தில் முஸ்லிம் வியாபாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

சாய்ந்தமருது கடற்கரை வீதியைச் சேர்ந்த அப்பிள் பழ வியாபாரியான இ.முகமது அப்துல் ஹஸன் (வயது - 35) என்பவரே நேற்று முன்தினம் இரவு சுமார் 9.15 மணியளவில் சுட்டுக்கொல்லபட்டவராவார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்ட அப்பிள்பழ வியாபாரி, தனது கடையில் கஞ்சாவை இரகசியமான முறையில் வைத்து விற்பனை செய்து வந்தார் என்றும், இதனாலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

முல்லைத்தீவுக் கரையிலிருந்து கடலை நோக்கி சுமார் 12 கடல்

இணையானதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போன கப்பல் சிங்கப்பூர் திரும்பியது!

## கடற்படை தேடுதல் கைவிடப்பட்டது

இலங்கையை நோக்கி வந்து கொண்டிருந்த போது காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட ஸ்பெயின் கப்பல் மீளவும் சிங்கப்பூருக்கே திரும்பிச் சென்றுவிட்டதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

சிங்கப்பூரிலிருந்து இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த போது ஸ்பெயின் கப்பல் கடந்த ஞாயிறன்று காணாமல் போயிருந்தது.

ஸ்பெயின் அதிகாரிகளிடம் இருந்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நேற்று முன்தினம் கடற்படையினர் பாரிய தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர்.

கடந்த திங்கட்கிழமை காலியை வந்தடைய வேண்டிய இந்தக் கப்பலைத் தேடி நடத்தப்பட்ட தேடுதல்கள் நேற்றுக்காலையுடன் நிறுத்தப்பட்டதாகவும் -

மூன்று நாட்களாக தொடர்பில் நிலவிய பிரச்சினைகளையடுத்து இந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன்னர்

# ஐரோப்பிய அரசியலமைப்பு நிபுணர்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசிப்பர்!

## புலித்தேவன் கொழும்பில் தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், ஐரோப்பிய நாடுகளிலிருந்து அரசியலமைப்பு ஆலோசகர்களை அழைத்து வந்து கலந்துரையாடவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.



கொழும்பில் வெளிநாட்டு ஊடகவியலாளர் சங்கத்தில் நேற்று முன்தினம் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கைக்கு வந்த பின்னர், அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் திகதி அறிவிக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தின் அடிப்படையிலேயே பேச்சு நடாத்தத் தயாராக உள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா இந்தப் (12 ஆம் பக்கம் பார்க்க)


பதிப்புலக வேந்தர்களே!

நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION)
சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.



PCC COLOUR DIGTAL PRINTER




- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# உயர்தொழில்நுட்ப மாணவர்களுக்கு மகாபொல கொடுப்பனவு அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கான மகாபொலக் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த மாணவர்களுக்கு ஆகக்கூடுதலான தொகையாக மாதமொன்றுக்கு 650 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது. எனினும், தற்போது மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மாதமொன்றுக்கு 750 ரூபா வழங்கப்படவுள்ளது.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான மகாபொலக் கொடுப்பனவு எதிர்வரும் புதன்கிழமை முதல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தத் தொகையையும் அதிகரிக்குமாறு பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## கலைவார பொதுக்கூட்டம்

யாழ். பல்கலைக்கழக - கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கலைவாரம் தொடர்பான பொதுக் கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே, இந்தப் பொதுக்கூட்டத்திற்கு அனைத்து வருட கலைப்பீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு யுனிசெப் உதவி!

(ஆழியவனை)

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் சுமார் 71 ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்துள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிதி சிறுவர் மற்றும் பெண்களுக்கான அமைவிடங்கள் அமைப்பதற்கும், அவற்றிற்கான தளபாடங்கள், கணினிகள், தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கும் செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை - நாள் தோறும் 200 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் காரணமாக பொலிஸ் நிலையங்களில் சரணடைவதாகத் தெரியவருகிறது.

## நயினாதீவு உற்சவம்

# ஏற்பாடுகள் குறித்து செயலகத்தில் கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான ஏற்பாடு குறித்த கலந்துரையாடல் ஒன்று யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஜீலை 3ஆம் திகதி தெப்போற்சவத்துடன் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா முடிவடையவுள்ளது.

இந்தத் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களுக்கான போக்குவரத்து, சுகாதார வசதிகள் படகு சேவை போன்ற விடயங்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடல் - எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னரே - நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழாவுக்கான சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி தெரிவித்தார்.

## உயர் தொழில்நுட்ப அரையாண்டு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சகல மாணவர்களுக்குமான முதலாம் அரையாண்டுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் இங்குள்ள சகல கற்கை நெறிகளுக்குமான பரீட்சைக்குத் தோற்றும், தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களும், மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் விண்ணப்பங்களை உடன் அனுப்பிவைக்குமாறு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பதிவாளர் கேட்டுள்ளார்.

## பருத்தித்துறை–நாவலடிச்சந்தி வீதி

# திருத்த வேலை இடைநிறுத்தம்!

(வடமராட்சி)

பருத்தித்துறை 1ஆம் கட்டை நாவலடிச் சந்தி வீதி - பருத்தித்துறை நகரசபையால் திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி வீதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. பருத்தித்துறை நகரசபையால் 1ஆம் கட்டைச் சந்தியில் இருந்து 200 யார் தூரம் திருத்தப்பட்ட பின்னர், இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதியால் செல்லும் மாணவர்கள் அதாவது, மூன்று பிரபல பாடசாலைகளுக்குச் செல்லும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பலவித அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த வீதியூடாக - 751, 752 மற்றும் 757 ஆகிய இலக்க பஸ்களும் பயணம் செய்கின்றன. இதனால், இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதுடன், வீதி விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வீதியைத் திருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (17)

# கல்லுடைக்கும் ஆலையை இயக்குவதற்கு அனுமதி!

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி-மண்டான் பகுதியிலுள்ள கல்லுடைக்கும் ஆலை அனுமதிப்பத்திரம் பெற்றிருந்ததால், அதனைத் தொடர்ந்தும் இயக்குவதற்கு யாழ். மனித உரிமை ஆணைக்குழு அனுமதித்துள்ளது.

கரவெட்டி-மண்டான் கல்லுடைக்கும் ஆலை இயங்குவதற்கு எதிராக சோழங்கன், மண்டான், விபுலானந்தர் ஆகிய சனசமூக நிலையச் சூழலில் வாழும் மக்கள் - யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இந்தக் கல்லுடைக்கும் ஆலையினால், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன, தமது வயல் நிலங்கள், கிணறுகள் என்பன பாதிப்படைகின்றன என இந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்து இருந்தனர்.

இந்தவிடயம் தொடர்பாக, யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது - கல்லுடைக்கும் ஆலையை அமைப்பதற்காக - பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலர் ஆகியோரின் அனுமதியைப் பெற்றே மண்டான் கல்லுடைக்கும் ஆலை இயங்க ஆரம்பிக்கப்பட்டது தெரியவந்தது.

எனவே - இதற்கமைய கல்லுடைக்கும் ஆலையை இயக்க யாழ். மனித உரிமை ஆணைக்குழு அனுமதித்துள்ளது. இந்தக் கல்லுடைக்கும் ஆலையினால் மக்களுக்குத் தீங்கு ஏற்படுமாயின், அனுமதி வழங்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் பற்றைக்குள்ளிருந்து மீட்பு!

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களுக்கு முன்பு வீதியோரமாக நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்து இருந்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தவேளை நேற்று முன்தினம் இந்த மோட்டார் சைக்கிள் மருதனார்மடச் சந்திக்கு அண்மையாகவுள்ள பற்றைக்குள் இருந்து பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள் நேற்றையதினம் உரிமையாளரினால் இனம் காணப்பட்டதையடுத்து, அவரிடம் ஒப்படைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் வாராந்தம் நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 5 மணிக்கு 'முருகன் அருள்' என்னும் பொருள் பற்றி கே.சி.வேலாயுதம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் இரண்டு நாள் செயலமர்வு

'சங்கத்தின் நோக்கும், நோக்கப் பண்பும்' என்ற தலைப்பில் இருநாள் செயலமர்வு எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில், யாழ். கல்விவலய மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில், பிரட்ரிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அஸ்கரிட் பெக்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி மன்றத்தின் மாநாட்டில், இந்தக் கருத்தரங்குகளுக்கு பொறுப்பான ஜனாப் மொஹமட், சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம், பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்தமாநாட்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் நிர்வாகசபை உறுப்பினர்களின் மூன்று ஆசிரியர்களும், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டினை எட்யுகேசன் இன்ரநஷனல் பிரட்ரிக் ஈபேர்ட் மன்றமும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

**SPOKEN ENGLISH**

ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்குச் சென்று இலகுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கும், உத்தியோகத்தர்களுக்கும் மிகக்குறுகிய காலத்தில் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொடுக்கப்படும். தொடர்பு : க.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (735)

இரண்டு ஆண்டு நிறைவை முன்னிட்டு

விசேட விலைக்கழிவு விற்பனை

17.05.2004 திங்கட்கிழமை முதல்
22.05.2004 சனிக்கிழமை வரை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முகூர்த்தப் பட்டுப்புடைவைகள், நவநாகரிக டிசைன் சாறி வகைகள், துணிமணிகள், சேட், சூட் போன்ற இன்னும் பல உங்களுக்காகவே காத்திருக்கின்றன!

தாமதிக்கவேண்டாம்! இன்றே விரையுங்கள்!

நவீன பாதணிகள் அறிமுகஞ்செய்யப்படுகின்றன!
கொள்வனவு செய்பவர்களுக்கு நன்கொடைகள் உண்டு.

மில்லேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்

இல. 10,11 பெரியகடை
(மலேயன்கபே முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P- 021 - 45901.74
(முற்றிலும் குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையம்) (சி-2542)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
இன்று முதல் சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த



ஆய்த எழுத்து

(சி-2387)

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, ரக்சிதா நடித்த
தம்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு, இரவு : 8.45 (பு.நே.)
SLIVER
(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்

5 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கை யிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த



அருள்

(சி-2397) (றீல்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி



தென்னிந்திய திருத்தல யாத்திரை
பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம்
தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்

- புட்டபர்த்தி பகவான் சத்தியசாயி பாபா தரிசனம், திருப்பதி, சென்னை, மகாபலிபுரம், மெரினா பீச், காஞ்சிபுரம், வரதராஜப் பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லை காளி அம்மன், திருவாரூர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளி குகை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமாரி, திருவேணி சங்கமம், குமரி அம்மன் ஆலயம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை - கடலில் யந்திர படகு மூலம் சென்று பார்த்தல், திரு அரங்க நாத சுவாமி, திருவரங்கம் திருவனைக்காவல் சிவன் கோயில், சமயபுர மாரியம்மன்.
- யாத்திரிகர்களுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுடனான பிரயாணமும், உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.
- இத் திருத்தல யாத்திரை யூன் 5 ஆம் திகதி ஆரம்பமாகும்.
- யாத்திரிகர்களின் எண்ணிக்கை வரையறுகப்பட்டிருப்பதால் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- நியாயமான கட்டணம்.

**Metro Travel & Tours (pvt) Ltd**
No - 403 1/2, Galle Road, Wellawatta col - 06
Tel - 2362766, 2361672
Fax - 2361888

(இலங்கை உல்லாச பிரயாண சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்) (சி-2543)

# அரசியலமைப்பு திருத்தத்தின்போது புலிகளையும் இணைக்க வேண்டும்!

## பேராசிரியர் நிஹால் ஜெயவிக்கிரம

அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படும் போது, விடுதலைப் புலிகளையும் ஒரு தரப்பினராக இணைத்துக்கொள்ள வேண்டுமென, பேராசிரியர் நிஹால் ஜெயவிக்கிரம தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் 'மக்களும் அரசியலமைப்பும்' என்ற தொனிப் பொருளில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணப்படாத நிலையில், பொதுத் தேர்தல் முடிவுகளானது, அரசியலில் மாற்றம் கொண்டுவர சிறந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசியல் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. சகல இன மக்களினதும் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்படும் அரசியலமைப்பே சிறந்தது. பெரும்பான்மையினரது நலனை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு அவை இயக்கப்படக் கூடாதென்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வருவதற்கான சட்ட மூலத்தை ஏற்கும் பொறுப்பு சுதந்திரமான ஒரு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். நியமிக்கப்படும் ஆணைக்குழுவுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநித்துவம் வகிக்காத அரசியல் கட்சிகளுக்கும், அதே போன்று இந்த விடயம் தொடர்பாக கரிசனை காட்டும் குழுக்களுக்கும் ஆலோசனைகள் முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென பேராசிரியர் ஜெயவிக்கிரம மேலும் தெரிவித்தார்.

# கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

## ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கச் சமாதான பேச்சுவார்த்தை மூலம், நிரந்தரத் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்தால், ஐக்கிய தேசியக் கட்சி எவ்வித நிபந்தனைகளுமின்றி தனது ஆதரவை வழங்குமென அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

சமாதான முன்னெடுப்பிற்கு ஆதரவளிப்பது ஐக்கிய தேசியக்கட்சியின் உரிமை. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசில் அங்கம்வகிக்கும் கட்சிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இன்னமும் பொது இணக்கப்பட்டான நிலைப்பாடொன்றுக்கு வரவில்லை.

எனவே, சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசின் கீழுள்ள கட்சிகள் பொது இணக்கப்பாடொன்றுக்கு வருவது அவசியமானதெனவும் சேனாரத்ன குறிப்பிட்டார்.



திருகோணமலையில் இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்குமான முதலாவது சந்திப்பு திருகோணமலை மாவட்டயுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (சசிகுமார்)

# கந்தப்பொல வன்முறைச் சம்பவம் நாடாளுமன்றில் காரசார விவாதம்

(கொழும்பு)

தமிழ் மக்களை காப்பாற்ற வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலமான நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையில், மலையத்திலும் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள சிந்தித்து செயற்படவேண்டும் என, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவித்தார்.

கந்தப்பொல வன்முறை தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மலையகமக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் இந்திய வம்சாவளி மக்கள் மீது படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள், பழிவாங்கல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் பல உயிர்களையும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் தமிழ்மக்கள் இழந்தபின்னரே பிரதான கட்சிகள் சமாதானம் பற்றிப்பேசுகின்றன. இந்த நிலையில் மலையக மக்கள் வாழும் பிரதேசங்களிலும் சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும். இல்லையேல் மலையகத் தமிழ் மக்கள் அரசாங்கத்தையோ, நடைமுறை சட்டங்களையோ நம்பிச் செயற்படாத நிலை ஏற்படும் என எச்சரித்தார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் கந்தப்பொல விடயத்தை மலையக மக்கள் முன்னணி அரசியல் மயப்படுத்தியுள்ளது என, குற்றம் சுமத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் தமது உரையில் 1983 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்போவதாக கூறும் அரசாங்கம் அன்று முதல் 1994 ஆம் ஆண்டு வரையும் இடம்பெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நட்டஈட்டை வழங்க முன்வருமா என கேள்வி எழுப்பினார்.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓபல் பி.சோபித்த தமது உரையில் கந்தப்பொல வன்முறையின் பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருப்பதாக குற்றஞ்சுமத்தினார். விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்க நுவரெலிய மாவட்டத்தில் தமிழர்கள் 57 வீதமும் சிங்களவர்கள் 42 வீதமும் என்ற நிலையில் இருப்பதால் அங்கு இனமோதல்கள் ஏற்படுவதாகக் கூறினார்.

எனவே அங்கு விசேட படைப் பிரிவு ஆரம்பிக்கப்படவேண்டும் என கேட்டுக்கொண்டார். இவ்விவாதத்தில் பங்கேற்ற தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி.ரட்ணநாயக்க தோட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இன்னமும் அவர்களின் கைகளுக்குச் செல்லாமல் தோட்டத்திற்குச் செல்லும் நிலையை அந்த மக்களின் பிரதிநிதிகள் இதுவரை நிவர்த்திசெய்யாமல் வீணான விடயங்களைப் பேசுவதாகத் தெரிவித்தார். (01)

# அரசாங்கத்தின் சமாதான செயலகம் பரந்துபட்ட அதிகாரங்களுடன் மாற்றியமைப்பு

(கொழும்பு)

அரசின் சமாதானச் செயலகம் பரந்துபட்ட அதிகாரங்களுடன் மாற்றியமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலகத்தின் தலைவராக ஜயந்த தனபாலவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமிமித்ததைத் தொடர்ந்தே இம்மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வருடங்களாக செயலகத்தில் பணியாற்றி வந்தவர்கள் இம்மாத இறுதியுடன் பணி நீக்கம் செய்யப்படுவதுடன், அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளைக் கையாளுதல், நோர்வேயின் சமாதான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் சமாதானச் செயலகத்தன் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், இவையனைத்துக்கும் பொறுப்பாக ஜனாதிபதியின் கீழ் சமாதான செயலகத்தின் தலைவர் பரந்துபட்ட அதிகாரங்களுடன் செயற்படுவாரெனவும் தெரியவருகின்றது.

அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு போதிய விளக்கத்தைக் கொடுக்கும் வகையில் தொடர்பாடல் சேவை ஒன்றையும் சமாதான செயலகத்தின் ஊடாக விஸ்தரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அரச வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

# அரசாங்கம் உறுதியளித்த விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லையாம்

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் உறுதியளித்த பல விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என, ஐக்கிய தேசியகட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பை வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்ததை சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்பி.திசநாயக்க நியமிக்கப்பட்ள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இதேவேளை - அரசாங்கத்திற்குள் சமாதானமுயற்சிகள் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் நிலவுகிறது.மணிராசன் குளத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் முகாம் அமைத்ததாக குற்றம் சுமத்திய ஜே.வி.பியினர் படையினருக்கு எதிராக அண்மையில் இரண்டு தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து எவ்வித கருத்தையும் வெளியிட வில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு பேச்சு நடத்தத்தயாரென ஜனாதிபதி கூறுகிறார். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் அது தமிழீழத்திற்கு வழிவகுக்குமென வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் என்பது தமிழீழத்திற்கான பாதையாகும் என ஜே.வி.பி.கூறுகின்றது. இவ்வாறு அரசாங்கத்துக்குள்ளேயே முரண்பட்ட கருத்துக்களை வைத்துக்கொண்டு முறையான பேச்சுவார்த்தையை எவ்வாறு ஆரம்பிக்கமுடியும் என ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.(01)

# இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் ஸ்பானிய கப்பல் காணாமல் போயுள்ளது

(கொழும்பு)

தனது கன்னிப் பயணத்தை ஸ்பெயின் நோக்கி மேற்கொண்ட ஸ்பெயின் அரசுக்குச் சொந்தமான புதிய கப்பலொன்று இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் காணாமல் போயுள்ளது.

12 மாலுமிகளுடன் சென்றுகொண்டிருந்த இக்கப்பல் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் வைத்தே காணாமற் போயுள்ளது. கடந்த திங்கட்கிழமை காலித் துறைமுகத்தைவந்தடைய வேண்டிய இக் கப்பல் இதுவரை எந்தவித ரேடியோத் தொடர்பையும் மேற்கொள்ளாததாலேயே இது காணாமல் போனதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இறுதியாக இக் கப்பல் இந்திய சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும் சங்கமிக்கும் மலாக்கா நீரிணையில் வைத்தே ரேடியோத் தொடர்பை மேற்கொண்டிருந்தது எனவும், இக் கப்பலில் இருந்த மாலுமிகளில் 10 பேர் ஸ்பானியர்கள் என்றும் ஏனைய இருவரும் பிறநாட்டவர்கள் என்றும் தெரியவருகிறது.

ஸ்பெயினுக்கும் மொராக்கோவிற்கும் இடையிலான போக்குவரத்துக்கென ஸ்பானிய அபிவிருத்தி அமைச்சகத்தால் புதிதாக வடிவமைக்கப்பட்ட இக் கப்பல் 500 இருக்கைகளைக் கொண்டது எனவும், வடிவமைக்கப்பட்ட இடத்திலிருந்து ஸ்பெயினுக்கான தனது கன்னிப்பயணத்தை இது மேற்கொண்டிருந்த வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்குப் பின்னர் இக் கப்பலில் இருந்து எந்தவித ரேடியோ சமிக்ஞையும் கிடைக்கப் பெறவில்லை எனவும், தெரியவருகிறது.

இக் கப்பலைத் தேடும் பொருட்டு ஸ்பெயின் ஒரு மீட்புக் குழுவை அனுப்பியுள்ள அதேவேளை, இக் கப்பலின் பயணப்பாதைக்கு அருகிலுள்ள நாடுகளை இக் கப்பலைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இராஜதந்திர ரீதியாக கோரியுள்ளது.

# ஐ.நா. பொதுக்கூட்டத்திற்கு சந்திரிகாவுக்கு அழைப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வழைப்பை ஏற்று ஐக்கியநாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியளவில் ஜனாதிபதி சந்திரிகா நியூயோர்க் செல்லவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்துக்கான அழைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இவ்வழைப்பு தனக்கு அனுப்பப்படாமைக்கு, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி சார்லி மகேந்திரனே காரணமென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ் சாட்டியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும், சார்லி மகேந்திரனை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதிப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஹக்கீமை விலகுமாறு கோரிக்கை!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமை, கட்சியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது தங்களது கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடி நிலைக்கும் உட்பூசலுக்கும் ரவூப் ஹக்கீமே காரணம் என்று குறிப்பிட்டுள்ள ஆர்.பதியுதீன் நடுநிலை வகிக்காது, பக்கச் சார்பாக கட்சித்தலைமை நடந்து கொண்டதால்தான் இத்தனை பிரச்சினைகள் உருவாகியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துக்கூறிய பதியுதீன் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம், தனது தவறுகளை ஏற்றுக்கொண்டு கட்சியிலிருந்து விலகவேண்டுமென ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான நஜீப், ஏ.மஜீத், பை.்.ஸ்சல் கசீம் அமீல் அலி உட்பட தானும் கருதத்துக் கூறினார்.

ரவூப் ஹக்கீம் விலகியபின்னர், தமது கட்சியிலிருந்து பிரிந்து போன பேரியல் அஷ்ரப், ஏ.எல்.எம். அதாவுல்லா உட்பட அனைவரையும் மீண்டும் கட்சியில் இணைத்துகொள்ள அழைப்புவிடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பங்களாதேஸுடனான

# மூன்றாவது ஒருநாள் போட்டியையும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது



(கிரனெடா)

பங்களாதேஷ் அணியுடனான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுலாச் சென்றிருக்கும் பங்களாதேஷ் அணி, தற்போது ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி கிரனெடாவில் நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கடும் மழை காரணமாக 50 ஓவர்கள் கொண்ட போட்டி 25 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 25 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்த அணி சார்பாக ஹபிபுல் பசார் மட்டுமே கூடுதலாக 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் - ஸ்மித் 3 விக்கெட்டுக்களையும், பெஸ்ற், ராம்பவுல், மற்றும் பிராவோ மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத்தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 24.1 ஓவரில் 119 ஓட்டங்களை 3 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது.

இந்த அணி சார்பாக ஆர்.ஸ்மித் 23, சந்திரபோல் 24, எஸ்.ஸ்மித் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாஸ் பைசா, ரஹ்மான், இஸ்லாம் ரானா மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பறினர்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் ஆட்ட தொடர் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் ஆர்.ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார்.

## அஸ்ரா கிண்ண இன்றைய போட்டி

அகில இலங்கை ரீதியில் 16 வயதிற்குட்பட்ட பாடசாலை அணிகளிடையே நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியினரை எதிர்த்து, யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதும் போட்டி நடைபெறவுள்ளது. (58)

## விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டது

நாளையும், நாளை மறுதினமும் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகள் - தவிர்க்க முடியாத காரணத்தால், அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவிருந்த வீரர்களையும் மத்தியஸ்தர்களையும் இதனைக் கவனத்திற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கேட்டுள்ளார்.

# தாய்லாந்து கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக மொங்கியா

(பரோடா)

இந்திய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் நயன் மொங்கியா தாய்லாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மலேசியாவில் வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை ஆசிய கிரிக்கெட் சபை கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. அந்தப் போட்டித் தொடருக்கான தாய்லாந்து அணிக்குப் பயிற்சியாளராக பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு தாய்லாந்து கிரிக்கெட் நிர்வாகிகள் மொங்கியாவுக்கு அழைப்பு விடுத்திருந்ததாகவும், அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அவர் தாய்லாந்து சென்றுள்ளார் என்றும், பரோடாவில் நயன் மொங்கியாவின் மனைவி தனு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாய்லாந்தில் அவர் சுமார் ஒன்றரை மாதங்கள் தங்கியிருப்பார் என்று தாய்லாந்து தேசிய கிரிக்கெட் அணிக்கும், 19 வயதிற்குட்பட்ட தாய்லாந்து இளைஞர் கிரிக்கெட் அணிக்கும் அவர் பயிற்சியளிக்கவுள்ளார் என்று மொங்கியாவின் மனைவி தெரிவித்தார்.

ஆசிய கிண்ணத் தொடரில் வெல்லும் அணி அடுத்த ஆண்டு அயர்லாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. கிண்ணத்திற்கான போட்டித் தொடருக்கு தேர்வாகும் என்பதால், ஆசிய கிண்ணத் தொடரின் முக்கியத்துவம் கருதி மொங்கியாவைத் தாய்லாந்து அரசு அழைத்துள்ளது என்றும் மொங்கியாவின் மனைவி தெரிவித்தார்.

இருப்பினும், இந்திய அணியில் மீண்டும் இடம்பெறமுடியும் என்பதில் மொங்கியா முழு நம்பிக்கையோடு உள்ளார் என்றும், வாய்ப்புக் கிடைத்தால் இந்திய அணியில் ஒரு வீரராக இடம்பெற அவர் ஆவலாக உள்ளார் என்றும் தெரிவித்த அவர், தற்காலிக பயிற்சியாளராகத்தான் மொங்கியா தாய்லாந்து சென்றுள்ளார் என்றும், பரோடாவில் இளைஞர்களுக்கு பயிற்சியளித்து வருவதால் அவருக்கு அந்தத் துறையில் நல்ல அனுபவம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வசீம் அக்ரம் மீதான வழக்கை பாகிஸ்தான் நீதிமன்றம் தள்ளுபடி



இந்திய மதுபான நிறுவன விளம்பரத்தில் நடித்தது தொடர்பாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் 'வசீம் அக்ரம் மீது, தொடரப்பட்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்திய மதுபான நிறுவனத்தின் விளம்பரத்தில் நடித்ததன் மூலம், மத உணர்வுகளை வசீம் அக்ரம் நோகடித்துவிட்டதாக, பாகிஸ்தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கைத் தொடர்ந்தவர்-தனிப்பட்ட முறையில் எந்தப் பாதிப்பிற்கும் உள்ளாகவில்லை என்று கூறி, அக்ரம் மீதான இந்த வழக்கை நீதிபதி மூஷீர் ராவ் நிராகரித்தார்.

மதுபான விளம்பரப் படத்தில் நடித்ததற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது பயாஸ் என்பவர், தனிநபர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இதில் வசீம் அக்ரம் - பொது மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும், அவர் 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு தரவேண்டும் என்றும் இந்த மனுவில் குறிப்பிட்டிருந்தது.

இந்தியாவின் ஹர்பஜன்சிங், அவுஸ்ரேலியாவின் மக்ரா, தென்னாபிரிக்காவின் ரொட்ஸ், நியூஸிலாந்தின் பிளமிங், மேற்கிந்தியத் தீவுகளின் மேர்வின் டிலான், இலங்கையின் அத்தபத்து, சிம்பாப்வேயின் அன்டி பிளவர் ஆகியோர், அக்ரம் மாடலாக இருந்த மதுபான நிறுவனத்திற்கு மாடலாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# முரளிதரனின் விடயத்தில் இந்தியா உதவ வேண்டும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை



முத்தையா முரளிதரனுக்கு ஆதரவாக ஐ.சி.சியை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த விடயத்தில் இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் உதவியையும் கோரியிருக்கிறார்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் 'தூஸ்ரா' முறையிலான பந்துவீச்சு, கிரிக்கெட் விதிகளுக்கு முரணானது என்றும் அவர் இனிமேல் தொடர்ந்தும் 'தூஸ்ரா' முறையில் பந்து வீசினால், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஆட அவருக்கு ஓராண்டு காலம் தடை என்ற தண்டனை விதிக்கப்படும் என்றும் ஐ.சி.சி சென்ற வாரம் அறிவித்திருந்தது.

ஐ.சி.சியின் இந்த அறிவிப்புக்குப் பிறகு தூஸ்ரா வகையைச் சேர்ந்த பந்துவீச்சைப் பயன்படுத்தப் போவதில்லை என்று முரளிதரன் அறிவித்திருந்தார். இலங்கை கிரிக்கெட் சபையும் அவரிடம் 'தூஸ்ரா' முறையைப் பயன்படுத்தவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனிடையே முரளிதரனின் பந்துவீச்சுக் குறித்து அவுஸ்ரேலியப் பிரதமர் ஜான் ஹவாட் தெரிவித்த கருத்துப் பெரும் சர்ச்சையை கிளப்பிவிட்டது. முரளிதரனின் பந்துவீச்சை முறையற்றது என்றும், அவர் பந்தை எறிகிறார் என்றும் அப்பட்டமாகக் குற்றஞ்சாட்டினார் ஜான் ஹவார்ட்.

'பந்துவீச்சுப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? உங்கள் வேலை ஆட்சி செய்வது மட்டுமே.. அதை ஒழுங்காகச் செய்யுங்கள்' என்று முரளிதரன் அவருக்குப் பதிலடி கொடுக்க, முரளிதரனுக்கு ஆதரவாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ களத்தில் குதித்தார். ஐ.சி.சி. மீதே வழக்குப் போடப்போவதாக அவர் அறிவித்துவிட்டார்.

'ஐ.சி.சி. மீது வழக்குப் போடுவதற்கு தேவையான நடைமுறைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அதனால் அதற்கான வழிமுறைகள் குறித்து சட்ட நிபுணர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

முரளிதரனின் விஷயத்தில் இந்தியா எங்களுக்கு உதவவேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்தியா மட்டுமல்ல தெற்காசிய நாடுகள் எல்லாம் இந்த விடயத்தில் ஒன்றாக இணைந்து போராட வேண்டும்.

அவர் இலங்கையின் பொக்கிஷம்... இலங்கைக்கு மட்டுமல்ல தெற்காசிய நாடுகளின் மிகப் பெரும் சொத்து அவர்.... அவரைக் காப்பாற்ற இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளும் ஒற்றுமையாகக் குரல் கொடுக்கவேண்டும்.

இந்தியாவின் உதவியை வேண்டி - இந்தியாவின் இலங்கைக்கான வெளியுறவுத் தூதுவர் நிருபம் சென்னை, இந்த வாரம் சந்தி[illegible]ப் போகின்றேன். இந்தியா இந்த விடயத்தில் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தை அவரிடம் தெரிவிக்கவுள்ளேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## விளையாட்டு

## கலைவார நிகழ்வின் இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைவார நிகழ்வின் இன்றைய போட்டிகள்.

இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 6.00 மணிக்கும், காலை 7.00 மணிக்கு முதலாம் நான்காம் வருட மாணவர்களுக்கிடையேயான கூடைப் பந்தாட்டப் போட்டியும் இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டியும், ஐந்து மணிக்கு முதலாம், நான்காம் வருட மாணவர்களுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும்.

மாலை 4.00 மணிக்கு இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையே கரப்பந்தாட்டப் போட்டியும், மாலை 5.00 மணிக்கு முதலாம், நான்காம் வருட மாணவர்களுக்கிடையே கரப்பந்தாட்டப் போட்டியும் இடம் பெறும்.

அத்துடன் இன்று பகல் 12.00 மணிக்கு மாணவர் பொது அறையில் ஓவியப் போட்டி மற்றும் சிறுகதைப் போட்டி என்பனவும் இடம் பெறவுள்ளன.

## சிம்பாப்வே அணியின்

# டெஸ்ட் அங்கீகாரம் ரத்து செய்யப்படுமா?

## இன்று முடிவு

சிம்பாப்வே அணியில் கடந்த இரண்டு மாதங்களாக வீரர்கள் சங்கத்திற்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே இனப்பிரச்சினை தொடர்பாகச் சிக்கல் இருந்து வருகின்றது.

தேர்வுக் குழுவினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால், இலங்கையுடனான தொடருக்கு முன்பு கப்டன் ஸ்ரீக், பதவி விலகினார். அவருக்கு ஆதரவாக 14 வெள்ளையின வீரர்கள் போர்க்கொடி உயர்த்தினார்கள். இதனால், கறுப்பினத்தைச் சேர்ந்த புதுமுக வீரர்களை வைத்து சிம்பாப்வே, இலங்கைத் தொடரில் விளையாடியது. ஆனால், மிகவும் மோசமாகத் தோல்விகண்டது.

இதற்கிடையே அவுஸ்ரேலிய அணி, 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக சிம்பாப்வே சென்றுள்ளது. ஆனால், அங்கு போர்க்கொடி உயர்த்திய 15 வெள்ளைநிற வீரர்களுக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையே சமரசம் ஏற்படவில்லை. இதனால், அவுஸ்ரேலியத் தொடரிலும், ஸ்ரிக் உட்பட 15 வீரர்களும் ஆடமாட்டார்கள்.

இதற்கிடையே, சிம்பாப்வே அணியில் நிலவிவரும் பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீட் சிம்பாப்வே சென்றார். ஆனால், அவருடன் பேசமாட்டோம் என சிம்பாப்வே அறிவித்தது. இது துரதிஷ்டவசமானது என்று ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மணி தெரிவித்தார்.

சிம்பாப்வே பிரச்சினை குறித்து முடிவெடுக்க ஐ.சி.சியின் அவசரக் கூட்டம் இன்று நடைபெறும். இந்தக் கூட்டத்தில் சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அங்கீகாரம் ரத்துச் செய்யப்படுமா? என்பது முடிவு செய்யப்படும்.

இதற்கிடையில் சிம்பாப்வேயில் இருந்து உடனடியாக நாடு திரும்ப அவுஸ்ரேலிய அணி முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# வீடுகளைக் கட்டிமுடித்துத் தருமாறு மீனாட்சிபுரம் மக்கள் கோரிக்கை!

## - நிக்கெட் அதிகாரிகளை சந்தித்தனர்

யாழ்.கோட்டையை அண்டியுள்ள மீனாட்சிபுரம் கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த 36 குடும்பங்களுக்கு, தலா 75 ஆயிரம் பெறுமதியான வீடுகளை அமைத்துத் தருவதாக யாழ்.செயலக அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டு 18 மாதங்களாகியும் இது வரை வீடுகள் அமைத்து கொடுக்காததால், இந்தப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் அரச அதிபரை சந்திப்பதற்காக யாழ்.செயலகத்திற்குச் சென்றனர்.

இவர்கள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த 53 குடும்பங்களின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. இவர்களில் 36 குடும்பங்களுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை தமக்கு முழுமையாக எந்த ஒரு வீடும் அமைத்துத்தரப்படவில்லை.

தற்போது அத்திவாரம் போடப்பட்ட நிலையில் 15 வீடுகளும், கட்டடம் கட்டப்பட்ட நிலையில் 5 வீடுகளும் காணப்படுகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, எமது வீடுகள் ஏன் இதுவரை கட்டி முடிக்கப்படவில்லை எனக் கேட்டதற்கு மண், கல், தட்டுப்பாடு, மழை பெய்கிறது போன்ற காரணங்களைக் கூறுகின்றனர். தற்போது வைத்தியசாலைவீதி, முஸ்லிம்தெரு, நாவாந்துறை போன்ற பகுதிகளில் தற்காலிகமாக குடியமர்ந்துள்ளோம்.

எமது வீட்டுத் திட்டம் தொடர்பாக நிக்கொட் நிறுவன அதிகாரிகளைச் சந்தித்துக் கதைத்தபோது நாளை மீனாட்சிபுரம் வீடமைப்புத் திட்டத்தை வந்து பார்வையிடுவதாகத் தெரிவித்தனர். இது தொடர்பாக தாம் அரசாங்க அதிபரை சந்திக்க இருப்பதாகவும் அந்தப் பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர். (தீ)



கரவெட்டியில் 15 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மத்திய மருந்தகத்தை வடக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ அமைச்சு பணிப்பாளர் இந்திராணி தர்மராஜா திறந்து வைத்து உட்செல்லுவதையும், அருகில் யாழ்.பிராந்திய ஆணையாளர் சிவலிங்கம், வைத்திய கலாநிதி பவானி மற்றும் மருந்தக பொறுப்பு அதிகாரி எஸ். கணேஸ் ஆகியோரை படத்தில் காணலாம். (17)

## சிறுசெய்திகள்

### குட்டியப்புலம் பொதுநூலகம் மீள இயங்குகிறது

(உடுவில்)

மயிலிட்டி-குட்டியப்புலம் பொது நூலகம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து, பொதுநூலகம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நூலக செயற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. (101)

### வரிப்பத்திரத்தை பெறவும்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் லொறிகளுக்குரிய 2004 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, வரி அனுமதிப் பத்திரத்தைப் பெறாதவர்கள் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் தொடர்பு கொண்டு வரிப்பத்திரகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக கணக்காளர் அறிவித்துள்ளார்.

வரி அனுமதிப் பத்திரப் புத்தகம் முடிவடைந்தமையால் சிலருக்குப் பற்றுச் சீட்டு மட்டும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது புத்தகங்கள் கிடைத்துள்ளமையால் பற்றுச்சீட்டுப் பெற்றவர்கள் உடன் தொடர்பு கொண்டு வரிபத்திரதைப் பெற்றுக்கொள்ளலாம். (24)

### புங்குடுதீவு வைத்தியசாலை இயங்காமையால் சிரமம்

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை இயங்காமல் இருப்பதனால் அப்பிரதேசத்தில் மீளக் குயேறியுள்ள மக்கள் தமது அவசர மருத்துவ தேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் சிரமப்படுகின்றனர்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்ற நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட இவ்வைத்தியசாலையை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளார். (122)

### கொல்களம் அமைக்கும் பணி தாமதம்

(உடுவில்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைகுட்பட்ட மாதகல் காடாப்புலம் பகுதியில் கொல்களம் அமைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், அதற்குத் தெரிவு செய்த இடம் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்படாதிருப்பதால் கொல்களம் அமைக்கும் பணி தாமதமடைவதாக கூறப்படுகிறது. (101)

### அரியாலை கூட்டுறவுச் சங்கக் கிளை இடமாற்றம்

(அரியாலை)

அரியாலை நொத்தாரிஸ் வீதியில் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்த, யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 18 ஆம் இலக்கக்கிளை கடந்த புதன்கிழமை முதல் அரியாலை கலைமகள் வீதியில் உள்ள புதிய கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. (55)

### பரிசளிப்பு விழா

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களிடையே 2003 ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்.மாநரகசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் வாரத்திலே இடம்பெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (லெ)

### வருடாந்த உற்வசம்

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

### மட்டுவில் முத்துமாரி அம்மன் உற்சவம்

மட்டுவில் வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

யூன் மாதம் 1ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். விழாக் காலங்களில் தினமும் இரவு 7 மணிமுதல் 8 மணிவரை "தேவியின் பெருமை" என்னும் பொருள் பற்றி ஆசிரியர் கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். (24)

### வசாவிளானில் பொதுச்சந்தை

(உடுவில்)

வசாவிளான் பகுதி மக்களின் நன்மை கருதி வசாவிளான் சந்திரபுரத்தில் பொதுச்சந்தை அமைக்கப்படவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வலி வடக்கு பிரதேச சபையினால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, வெகுவிரைவில் அப்பகுதியிலுள்ள பொருத்தமான காணி ஒன்றை தெரிவுசெய்து சந்தை அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

### சிறுவர் அரங்க போட்டிகள்

(உடுவில்)

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சிறுவர் அரங்கப் போட்டிகள் ஜூன் மாதம் முதல் வாரத்தில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவிரும்பும் பாடசாலைகள் இதுவரை தமது விண்ணப்பங்களை அனுப்பாதிருந்தால் உடனடியாக விண்ணப்பிக்குமாறு தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் அறிவித்துள்ளார். (101)

# வலி. வடக்கில் வீதிகள் திருத்துவதற்கு ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

வலிவடக்கு பிரதேச சபை இவ்வாண்டுக்கான பிரமாண அடிப்படை நிதியிலிருந்து ஏழாம் கட்டை ஐயனார் கோவில் வீதியும், துர்க்காபுரம் வீதியும் செப்பனிடப்படவுள்ளது. இந்த வேலைகளுக்கென 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியிலிருந்து குட்டியப்புலம் பகுதி மின் விஸ்தரிப்பிற்கென கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இலங்கை மின்சாரசபையிடம் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டும் இன்னும் வேலை பூர்த்தியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடமும் அளவெட்டி மேற்கு முருங்கையப்புலம் மின் விஸ்தரிப்புக்கென ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மின் விஸ்தரிப்பு வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (101)

# வவுனியா விவசாயப் பயிற்சி நிலையத்தில் 3 நாள் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு

(உடுவில்)

நெற்செய்கையும் அதிலேற்படும் பிரச்சினைகள் பற்றி சகல விளக்கக் குறிப்புக்களுடனான மூன்றுநாள் விதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு வவுனியா மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஜூன் மாதம் 17,18,19 ஆம் தினங்களில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு கமநல சேவை நிலையப் பிரிவிலிருந்தும் 20 பேர் தெரிவு செய்து அனுப்பப்படவுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிடம், உணவு என்பன இலவசமாக வழங்கப்படும். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் இம்மாத முடிவுகுள் அவ்வப்பகுதி விவசாய போதனாசிரியர்களிடம் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

# வயோதிபரின் சடலத்தை அடையாளம் காணக்கோரிக்கை

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் பின்புறமாக உள்ள கடல் நீரேரியில் இருந்து மீட்கப்பட்ட 80 வயது வயோதிபரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை கடல் நீரேரியில் மிதந்த வயோதிபரின் சடலத்துடன் காணப்பட்ட அடையாள அட்டையில் சிதம்பரன் நாகன் (இராசசிங்கம் வீதி, யாழ்ப்பாணம்) எனக் குறிப்பிட்டிருந்தது.

இந்தச் சடலம் மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து பருத்தித்துறை நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் சடலத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் அதை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டதுடன், சடலத்தை அடையாளம் காண்பதற்காக 4 நாட்கள் பிரேத அறையில் வைக்கமாறும் -

சடலத்தை எவரும் உரிமைகோராவிடின் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

தற்போது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (202)

# தரம் 7, 8, 9 மாணவர்களுக்கு பிரத்தியேக பாடங்கள் அறிமுகம்

கல்வி அமைச்சு தரம் 7,8,9 மாணவர்களுக்கு பிரத்தியேகமாக வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய பாடங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

மேற்படி பாடங்கள் 2005 ஆம் ஆண்டு தரம் 7 இல் கல்விபயிலும் மாணவர்களுக்கு முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படும்.

இந்தப் பாடங்களுக்காக வாராந்தம் 6 பாடவேளைகள் ஒதுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்தப் பாடங்களுக்கான பாடத்திட்டங்களும், புத்தகங்களும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. அவை விரைவில் அச்சுக்கு வரும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் பாடப் புத்தகங்கள் யாவும் தயாராகிவிடும் இப்பாடங்களைக் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சியை தேசிய கல்வி நிறுவகம் வழங்கவுள்ளது.

2006 ஆம் ஆண்டில் இந்தப் பாடங்கள் தரம் 10 இற்கு அறிமுகப்படுத்தப்படும். முதலாவது கல்வி யாண்டிற்குரிய மாணவர்களுக்கு 2007 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தற்போது நடைமுறையிலிருக்கும் பாடத்திட்டதில் வரலாறு, புவியியல், குடியியல், ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்படவில்லை. எனவே இந்தப் பாடத்திட்டம் மாற்றப்பட்டு 2006 ஆம் ஆண்டு தரம் 6 மாணவர்களுக்கு இந்தப் பாடங்களும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : சு. கீர்த்தனா
முகவரி : சத்திரங்கை, கம்பர்மலை.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : சு. கோவர்த்தனா
முகவரி : சத்திரங்கை, கம்பர்மலை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்





## சிநேகிதியே

# குளியலறையை சுத்தமாக பேணல் ஆரோக்கியத்திற்குரிய வழியாகும்

குளியலறையும் ஓர் அறைதான் என்பதை நம்மில் பலர் மறந்து விடுகின்றனர். விலையுயர்ந்த வெளிநாட்டுக் கம்பளங்கள், சொகுசு கதிரைகள், பூச்சாடிகள் என்பன வரவேற்பறையை அழகாக்குகின்றன. இவை வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை வியக்க வைத்துவிடும்.

சற்று உள்ளே நுழைந்து, குளியலறை வரை சென்றால் தான் வீட்டின் முழு அழகும் தெரியும். குளியலறையை நாம்தானே உபயோகப்படுத்துகின்றோம். அது உள்ளே தானே இருக்கிறது. யார் வரப்போகிறார்கள் என்ற எண்ணத்தில் அநேகமான வீட்டுப் பெண்கள் இதனை சுத்தப்படுத்துவதில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.

ஒரு வீட்டை வைத்தே, அந்த வீட்டிலுள்ள பெண்ணை நன்கு புரிந்துகொள்ளமுடியும் என ஒரு அறிஞர் கருத்து. இவரது கருத்து - குளியலறைக்கும் மிகவும் பொருந்தும். குளியலறையின் நிலையை வைத்தே அந்த வீட்டுப் பெண்ணினதோ அல்லது பெண்களினதோ இயல்புகளை நன்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

குளியலறை சுத்தமாகவும், அழகாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக, மாபிள் பதித்த குளியலறையும், வெளிநாட்டுப் பொருட்களும் தான் அதில் இருக்க வேண்டுமென்பதில்லை. நாம் வழமையாக உபயோகித்துவரும் சாதாரண குளியலறையையே எம்மால் முடிந்தளவு சுத்தமாக வைத்திருக்கலாம்.

இன்று பல வீடுகளில் - குளிக்கும் அறையும், கழிப்பறையும் ஒன்றாகவே அமைக்கப்படுகின்றன. அநேகமான வீடுகளில் குளியலறை ஒரு தேவையற்ற அறையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக கூடியதாக உள்ளது. அழுக்குத் துணிகளை மூட்டை, மூட்டையாக கட்டி சிலர் தங்களுக்கு துவைக்க நேரம் வரும் வரை சேமித்து வைத்திருப்பார்கள்.

அழுக்குத் துணிகள் நிலத்தில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும். கதவுக்குப் பின்னாலும், கொடிகளிலும் அழுக்குத் துணிகள் காணப்படும். முகம் பார்க்கும் கண்ணாடியில் ஷாம்பூ துளிகளும், பற்பசை துளிகளும், சவர்க்கார நுரைகளும் படிந்து காணப்படும். தண்ணீர்க் குழாயைச் சுற்றியும் கறை படிந்து காணப்படும். இவைதான் குளியலறையின் அழகையும், சுகாதாரத்தையும் கெடுப்பவையாகும்.

நாம் தினந்தோறும் செலவழிக்கும் நேரங்களில் அரை மணித்தியாலமாவது, வாரத்திற்கு ஒருதடவை நமது வீட்டினை துப்பரவு செய்வதால், அதன் அழகை மட்டுமன்றி, சுகாதாரத்தையும் நாம் பேணிக்கொள்ளலாம்.

அவசரமாக குளியலறைக்குள் செல்லும் வேளைகளில் பாசியும் சவர்க்காரமும் படிந்த நிலத்தில் வழுக்கி விழுந்து எலும்புகள் முறிய வேண்டியநிலை ஏற்படுகின்றது. நாம் அவதானத்துடன் செயற்பட்டு சுத்தமாக வைத்திருப்போமானால் இந்த விபத்திலிருந்து தப்பிக்க முடியும்.

இதே சமயம் வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இந்நிலை ஏற்படுமானால் எவ்வாறு இருக்கும் என்பதை சற்றுச் சிந்தித்தீர்களா?

பாசியும் சவர்க்காரமும் படிந்த நிலத்தில், சில சமயங்களில் அதன் கால்வாய்களில் தலைமயிரும், குப்பைகூழங்களும் நிறைந்து நீர்தேங்கி நிற்கும்.

பாட்டுப்பாடி பார்ப்பது, கதைத்துப் பார்ப்பது, நடனமாடுவது - சில பத்திரிகை படிப்பதுகூட இங்கேதான்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் நாம் பயன்படுத்தும் குளியலறையை அக்கறையின்மை காரணமாக சுத்தப்படுத்தாது விட்டு விடுகின்றோம். மாதத்திற்கோ, வருடத்திற்கோ ஒருமுறை சுத்தம் செய்தால் போதுமெனத் தவறாக நினைத்து விடுகின்றோம்.

குளியலறையைச் சுத்தம் செய்வதை சிலர் தரக்குறைவாக நினைக்கின்றார்கள்.

நமது அன்றாடம் பயன்படுத்தும் அறைகளில் மிகவும் முக்கியமான அறையை நாமே சுத்தப்படுத்துவதில் என்ன தரக்குறைவு இருக்கின்றது. வசதி படைத்தவர்கள் இதற்கான வேலையாட்களின் மூலமாக அதன் சுகாதாரத்தை பேண முற்படவேண்டும்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் நேரமின்மையாலும், கூட்டுக்குடும்பங்களில் வாழும் பெண்களிடையே - நான், நீ என்ற போட்டியினாலும் வீட்டிலுள்ள குளியலறை எல்லோராலும் மறக்கப்பட்டுவிடுகின்றது.

குளியலறையின் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேணுவதில் வீட்டிலுள்ள பெண்களுக்கு மட்டும்தான் பொறுப்பு இருக்கின்றது எனக் கூறிவிடமுடியாது. ஏன் வீட்டிலுள்ள



ஆண்களும்கூட இதனை உணர்ந்து, பெண்களுக்கு ஒத்தாசையாக இருக்கலாம்.

நம் வீட்டு குளியலறையை சுத்தமாக பேணாது விடுவதன்மூலம் எதற்காக ஏனையோரிடமிருந்து தவறான அபிப்பிராயத்தை பெற்று நமது தரத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

## பண்பாட்டின் அடையாளங்கள்

தமிழர்கள் தம் பண்பாட்டின் அடையாளங்களைப் பேணுவதில் அதிக அக்கறை உடையவர்கள். இந்த நிலையில் ஒரு நாட்டின் பண்பாடு என்பது எதனைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது என்பதில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன.

இத்தகைய கருத்துக்களுக்கு மத்தியில் ஒவ்வொரு நாட்டின் பண்பாடுகளும் காலநிலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக குறிக்கப்படுகின்ற கருத்துக்கள் கவனத்திற்குரியனவாக உள்ளன.

தமிழர்கள் தமது பண்பாட்டின் அடையாளமாக பல அடையாளங்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

ஒருவரை முதன்முதலில் காண்கின்றபோது, வணக்கம் என்று கூறுவதும், நமது கைகள் இரண்டையும் கூப்பி வணக்கம் என்ற அடையாளத்தைத் தெரிவிப்பதும் - தமிழர்கள் பண்பாட்டின் ஒரு வெளிப்பாட்டு வடிவமாகும்.

வணக்கம் என்ற முறையை தெரிவிக்க - ஒருவரை முதன்முதலில் சந்திக்கும் வெளிநாட்டவர், தமது கைகளை சந்திக்கும் ஒருவரின் கைகளோடு சேர்த்து கைலாகு கொடுக்கும் பழக்கத்தைக் கையாளுகின்றார்கள்.

வெப்பப் பிரதேசங்களில் வாழும் மக்கள் - வெப்பம் காரணமாக இத்தகைய வேறுபாடுகள் காணப்படுவதாக தற்போது ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

குளிர் நிறைந்த பிரதேசங்களில் காணப்படுகின்ற மக்கள் தமது குளிரைப் போக்கி, வெப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில், கைகளோடு கைகளைச் சேர்த்து கைலாகு செய்துகொள்கின்றனர். ஆனால், வெப்பம் நிறைந்த பிரதேசங்களில் இத்தகைய பண்பாடுகள் தேவையில்லாததொன்றாகும். எமது நாட்டைப் பொறுத்தமட்டில் இவ்வாறான நடைமுறைகளைக் கையாளுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நடைமுறைகள் எமது நாட்டுப் பண்பாடுகள், கலாசாரம் என்பவற்றைப் புறந்தள்ளும் செயல்களாகும்.

இதேபோன்று வெப்பம் கூடிய நமது நாடுகளில் வெப்பத்தைக் குறைப்பதற்காகப் பெண்கள் பொட்டுவைக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது எனலாம். ஆனால், இக்காலப் பெண்கள் மஞ்சள் குங்குமத்தைக்கூட வைப்பதில் பின்நிற்கின்றனர். இதற்குப் பதிலாக ஒட்டுப்பொட்டும், வெறும் நெற்றியுமாக நிற்பதற்கு தான் அநேகமான பெண்கள் விரும்புகின்றார்கள்.

பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டு பேணவேண்டிய தேவை அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு. வெளிநாட்டு மோகம் தலைதூக்குவதைத் தவிர்த்தல் வேண்டும். வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் - அந்த நாட்டுக் காலநிலைக்கு ஏற்ப வாழலாம். அதேவேளை, நமது நாட்டில் வசிக்கும் ஒருவர் நமது நாட்டுக் காலநிலைக்கு ஏற்ப மாறவேண்டும்.

அவ்வாறாக பண்பாடு பேணப்படுவதற்கு வழி செய்தால் ஆரோக்கியமான ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

## இரும்புச்சத்து

இரும்புச்சத்து குறைவினால் ஏற்படும் குருதிச் சோகை வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் மட்டுமன்றி, வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அதிகரித்து வருவதாக அறியப்பட்டுள்ளது.

இரும்புச்சத்து குறைவினால், ஏற்படும் குருதிச் சோகை காரணமாக, நோயெதிர்ப்பு சக்தி குறைந்து, தொற்றுநோய்களுக்கு அடிக்கடி ஆளாகும் வாய்ப்பு அதிகம். இந்த நோயினால் உடற்றொழிற்பாடு குறைவுறும், சோம்பல் ஏற்படும்.



இதனால் மொழித்திறன், கல்வியில் கவனம் என்பன இழக்கப்படலாம் எனவும், ஞாபகசக்தியில் தற்காலிக தாக்கத்தை உருவாக்கும் என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறைப் பிரசவத்துக்கும் இந்த நோய் காரணமாகிறது.

இந்த நோயின் தொடர்ச்சியான தாக்கத்தினால் - உடல் வெளிறுதல், நாக்கின் மேற்பகுதி கடினமாகி நோ ஏற்படுதல் போன்றவையும் ஏற்படும்.

எமது குருதிக்கு சிவப்பு நிறத்தை அளிப்பதற்கும், நுரையீரலில் இருந்து உடலின் கலங்களுக்குள் ஒட்சிசனை கொண்டு செல்வதற்கும் ஈமோகுளோபின் அவசியம். இரும்புச் சத்தின் அளவு குறையும்போது குருதியினுள் உள்ள ஈமோகுளோபினின் அளவு குறைகின்றது. எனவே தான் பிரச்சினை ஏற்படுகிறது. ஆண்களைவிட, பெண்களுக்கே அதிகளவு இரும்புச்சத்து தேவைப்படுகின்றது. மாதவிடாய் ஏற்படும்போது, இரும்புச் சத்தின் அளவு குறைகின்றது. குறைந்த இரும்புச்சத்தை மீள அளிக்காவிட்டாலும், உடலில் பாதிப்பு ஏற்படலாம்.

பெண்கள், கர்ப்பகாலத்திலும், பாலூட்டும் போதும் குருதிச்சோகைக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படலாம்.

இரும்புச்சத்தினை அதிகமாக உறிஞ்சிக்கொள்வதற்காக விற்றமின்களுடனான புதிய காய்கறிகளையும், பழங்களையும் உணவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். உணவு சமைத்தலின்போது - புளி, தக்காளி, மற்றும் புளிப்பு, அமிலவகைகளைச் சேர்த்துக்கொள்ளலாம்.

கடலை, பயறு போன்ற தானியங்களை நீரில் ஊறவைத்து, முளை கட்டிய பின்னர் பயன்படுத்தலாம். மீன், முட்டை என்பன மிகவும் நல்லது. இரும்புச்சத்தை உணவாக உள்ளெடுத்துச் சற்று முன் பின் தேநீர், கோப்பி என்பவற்றை அருந்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இவை இரும்புச்சத்தை உறிஞ்சுவதற்கு தடையை ஏற்படுத்தும். இரும்புச்சத்துடைய உணவுடன் எலுமிச்சைச்சாறு சேர்த்தால், அது இரும்புச்சத்தை அகத்துறிஞ்சலைத் தூண்டும்.

கர்ப்பகாலத்திலும், பாலூட்டும் காலங்களில் உணவின் மூலம் கிடைக்கும் இரும்புச்சத்து போதியதன்று. எனவே வைத்தியரின் ஆலோசனையுடன் மேலதிகமாக இரும்புச்சத்துள்ள குளிகைகள், பாணிகள் என்பனவற்றை உள்ளெடுத்தல் நன்று.

## சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

என் பிரிய சிநேகிதியே, உன் வண்ண மடல் கண்டேன். யாவும் அறிந்து கொண்டேன். தங்களைச் சுற்றிப் போடப்பட்டுள்ள அடக்குமுறைகளுக்கு வெளியே வர எத்தனிப்பதை விடுத்து, அதற்குப் பக்கவாத்தியம் ஊதும் பெண்களாக உன்னைப்போன்ற சிலர் இன்னும் உள்ளார்கள் என்ற உண்மை தெரியும்போது ஏனோ மனம் கனக்கின்றது.

அண்மையில் என் உள்ளத்தினை உருக்கிய கவிதை ஒன்றை உனக்கு எழுதுகின்றேன்.

பாலக வயதில்
அம்மாவின்
அதட்டல்களினால் ~ என்
சிந்தனைச் சுதந்திரம்
சிதைந்து போனது.

இதை வாசித்ததும் தனது தலையிலே மண்ணை அள்ளிப்போடும் யானையின் ஞாபகம்தான் எனக்குள் எழுகின்றது. இன்று பெண்ணடிமை என்றும், ஆணாதிக்கம் என்றும் கீழைத்தேயத்தில் பேசப்படும் எண்ணக்கருவின் ஆணிவேர் என்ன தெரியுமா? ஆணாதிக்கத்தையும், பெண்ணடிமையையும் உங்கள் சமூகத்திலே உற்பவித்துப் போட்டவர்கள் உன்னைப் போன்ற பெண்கள்தான் என்பது உனக்கு சகித்துக்கொள்ளக் கடினமான விடயந்தான். ஆனாலும் உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

உங்கள் சமூகத்திலே பெண்ணானவள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எழுதாச் சட்டங்களை உருவாக்கியவர்கள் பெண்களே. 'பொம்பிளை சிரிச்சாப் போச்சு ~ புகையிலை விரிச்சாப் போச்சு' என்று இன்று பெண்ணினது மன உணர்விற்கும், சுயசிந்தனைக்கும் விலங்கிடுபவர்கள் உங்கள் சமூகத்தின் அனுபவசாலிகளாக உள்ள வயோதிபப் பெண்களே. இதில் கவலைப்படவேண்டிய விடயம் என்னவெனில், ஒருகாலத்தில் இவர்களும் தம்மைப் போன்ற இளம் பெண்களாக, எமக்குள்ள மன உணர்வுகளுடனும், எழுச்சியுடனும் காணப்பட்டவர்கள் என்பதே அடுத்து மிகவும் மனம் வருந்தவேண்டிய விடயம். இற்றைவரை மாமியார் கொடுமை என்றுதான் பேசப்படுகின்றதே தவிர, ஒருபோதும் மாமன் கொடுமை என்று பேசப்படுவதில்லை.

இதன் தாற்பரியம் யாது? பெண்ணடிமைக்கு ஒரு பெண்ணே காரணமாகின்றாள் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

'தலையிடியும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்பார்கள். ஆனால், ஒரு காலத்தில் தாமும் மருமகள்களாக இருந்து, அப்பாத்திரத்தின் இன்பங்களையும், வலிகளையும் அனுபவித்தவர்கள். தமக்கு வரும் மருமகள்களை மாற்றான் தாய் மனப்பாங்குடன் நோக்குவதே மிகவும் வேதனைப்பட வேண்டிய விடயமாகும்.

ஒரு பெண் திருமணம் முடித்து கணவன் வீட்டிற்கு எதிர்பார்ப்புக்களுடனும், அச்சங்களுடன் செல்கின்ற வேளையில், ஆற்றித்தேற்றவேண்டிய தாய்மார்கள் சொல்வதென்ன? நீ ஏதும் பேசக்கூடாது, கணவன் சொல்வதைக் கேட்கவேண்டும், மாமியார் சொல்வதைக் கேட்கவேண்டும் என்று எத்தனை அறிவுறுத்தல்கள்? ஆனால், தன் மகனுக்கு ஒருத்தி மனைவியாக வரும்போது 'இவள் உன்னை நம்பி, சொந்தங்களையும், பாசங்களையும் துறந்து வந்துள்ளாள்' இவளைக் கண் கலங்காமற் பார் என்று சொல்லும் தாய்மார்கள் உனது சமூக அமைப்பில் எத்தனை பேர்?

என் பிரிய சிநேகிதியே முதலில் உங்கள் மன உணர்வுகளைப் படம் போட்டுவிட்டு மற்றவை பற்றிச் சிந்தியுங்கள்.

இன்னும் சில நிஜங்களை என்னால் உனக்கு இம்மடல்மூலம் சொல்லமுடியவில்லை என்பது நிஜம். சொன்னவை எல்லாம் நிஜங்கள்தான். மறுமடலில் உன்னைச் சந்திக்கும் வரை...

அன்புள்ள சிநேகிதி
~நீலா.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை. இன்றைக்கு எங்கள் பாடசாலையின் கலைவிழா. எல்லா மாணவர்களும் வடிவான உடுப்புப் போட்டு ஓடியாடித் திரிகினம். இன்னும் கொஞ்ச நேரத்திலை விழா தொடங்கப்போகுது. என்னோடை படிக்கிற பிள்ளையளின்ரை அம்மா மாரும் வந்திருக்கினம். எல்லாரும் மகிழ்ச்சியாக மண்டபத்துள்ளை அவசரமாகப் போய் இருக்கினம். என்ரை அக்காவும் நீளப்பாவாடை போட்டு, ஒற்றைப்பின்னலில் சடைநாகம் வைச்சு, குஞ்சம் கட்டி நிற்கிறாள். அவள் இண்டைக்குப் பண்ணிசை பாடப்போகிறாள். அவளுக்கு நல்ல குரல். இனிமையாகப் பாடுவாள். பாடசாலையில எந்த விழா எண்டாலும் அவள்தான் பாடுவாள். எல்லாரும் சொக்கிப் போய் நிப்பினம். எனக்கும் நல்லாப் பாடத்தெரியும். ஆனால் நான் சின்னப்பிள்ளை எண்டு என்னை ஒருநாளும் பாடவிடுகிறதில்லை. எங்கடை சமயபாடம் படிப்பிக்கிற ரீச்சர் சொன்னவ - திருஞானசம்பந்தர் மூண்டு வயதிலை தேவாரம் பாடினவராம். நானும் அவரைப் போலப் பாடுறன் எண்டு என்னைப் பாராட்டுவா. வகுப்பிலை நான்தான் நல்லாப்பாடுவேன். ஆதால என்னிலை எல்லாருக்கும் கொஞ்சம் எரிச்சல். ஆனா வெளியால காட்டமாட்டினம். எனக்கு அவயின்ரை முகத்தைப் பார்க்க விளங்கும். என்ன.. இன்னும் அப்பப்பாவைக் காணயில்லை! அப்பா! அவரை நினைச்சால்.. எனக்கு கவலை வரும். நான் பிறந்து ஆறாம் நாள் என்ரை அம்மா.. காய்ச்சலால்.. வந்து.. செத்துப் போனாளாம்.. என்னை என்ரை அப்பப்பாதான் வளர்த்துவிட்டவராம். அப்பப்பாவை நினைச்சால்...

எங்கடை வீட்டிலை அப்பப்பாதான் சமையல். என்ரை அப்பாவுக்கு ஆஸ்பத்திரியிலை இரவுவேலை. பின்னேரம் 4 மணிக்கு வெளிக்கிட்டால் அடுத்த நாள் காலை 8 மணிக்குத்தான் வீட்டை வருவார். வந்தவுடனை படுத்து நித்திரை கொள்ளுவார். அப்பப்பாதான் எங்களுக்கு குளிக்க வார்த்துச் சாப்பாடு தருவார். எங்கடை வீட்டுக்கை வேப்பமரத்தடியிலை ஒரு சின்ன வைரவர் கோயில். ஒரு ஓலைக் கொட்டில். நிலம் சாணத்தால் மெழுகியிருக்கும். எனக்கு அப்பப்பா அந்தக் கோயிலைக் கூட்டி, மெழுகி, விளக்கு வைச்சுக் கும்பிடும் போது பார்த்தால் தேகம் புல்லரிக்கும். அப்பப்பாவும் நல்லாத் தேவாரம் பாடுவார். அதைக் கேட்டு நானும், அக்காவும் பாடிப்பழகினோம்.

கோயிலுக்குச் சிலவேளை பொங்கல் மடையும் செய்வார். எங்கடை வீட்டு வாசலில் மாமரமும், பலாமரமும் நிக்குது. இரண்டும் நல்லாக் காய்க்கும். கோயிலைச் சுற்றிப் பொன்னொச்சியும், செவ்வரத்தையும், மல்லிகையும், துளசியும் நிறைய நட்டு வைச்சிருக்கிறார். எங்கடை கிணத்துக்கு துலா போட்டிருக்கு. அப்பப்பா ஓலைப்பட்டையைக் கயிற்றில் கட்டி தண்ணீரை இறைக்க, நானும் அக்காவும் பாத்தி மாறுவோம். வாய்க்கால் தண்ணியிலை காகங்களெல்லாம் வந்து செட்டையடிச்சுக் கொண்டு குளிக்கும். தென்னையும், வாழையும், கமுகும் எண்டு எல்லாத்துக்கும் தண்ணீர் கட்டமுடிய இருண்டிடும். அப்பப்பாவுக்கு களைப்பே இல்லை. எல்லோரும் முகம் கால் கழுவிப் போட்டு, பூக்கள் பறித்துக் கொண்டுபோய் வைரவருக்கு சாத்துவோம். அப்பப்பா தேவாரம் படிப்பார். நாங்கள் சேர்ந்து பாடுவோம். அதுக்குப்பிறகு எங்களுக்குப் பாடம் சொல்லித்தருவார்.

ஒருநாள்... அப்பப்பாவிடம் நான் கேட்டேன். அப்பப்பா எங்கடை அப்பம்மா எங்கே? அவர் ஒருகணம் திகைச்சுப்போனார். அவர் முகத்தில் வேதனை படர்ந்தது. "கமலம்! இஞ்சைவா குஞ்சு!" எண்டு என்னைத் தனக்குப் பக்கத்திலை இருத்தினார். "சிவகாமி! நீயும் வாமோனை!" எண்டு அக்காவையும் கூப்பிட்டு மற்றப் பக்கத்திலை இருத்தினார். எங்கடை கைகளைப் பற்றிக்கொண்டார். அவருடைய கையை இறுக்கிப் பிடித்தோம். அவர் சொல்லத் தொடங்கினார்... "எனக்கு மோனை இப்ப 70 வயதாப் போச்சு. 30 வரியத்துக்கு முந்தி நான் சரியான குடிகாறன். உங்கடை அம்மம்மாவைப் படாதபாடுபட வைச்சன். அவள் பொறுமையாக இருந்தாள். உங்கடை அப்பா பிறந்தபோது நான் விடுகாவாலிபோல ஊரிலே திரிஞ்சன் வீட்டை வாறதே இலலை. அவள் கஷ்டப்பட்டு மூண்டு பிள்ளையளையும் வளத்தாள். உங்கடை மாமிமார் இரண்டு பேரும் உங்களைப் போலச் சின்னனிலை நல்ல உதவி செய்தினம். ஆனால், ஒருநாள்... நான் கடை மாமிமார் நல்லாக்குடிச்சுப் போட்டு வந்தன். அவளிட்டை என்னகறி எண்டு கேட்டன். அவள் பயத்தில் தங்காயும், கீரையும் எண்டு சொன்னாள். எனக்கு அண்டைக்கு கோழிக்கறி சாப்பிடவேணும்போல இருந்தது. கறிச்சட்டியைத் தூக்கியெறியப் போனன். அவள் குறுக்கை வந்து நிண்டு "ஐயோ! இன்னும் பிள்ளையள் சாப்பிடயில்லை!" எண்டு கத்தினாள். நான் கோபத்திலை என்ன செய்யிறனெண்டு யோசியாமல் அவளைப் பிடிச்சுத் தள்ளிவிட்டன்! அவள் விழ, அவளின்ரை தலை அம்மியில் அடிபட்டது. மண்டை நொருங்க அப்பவே! அவள் அசையாமல் கிடந்தாள். ஒரே! இரத்தம்! அவ்வளவுதான்!... அப்பப்பா விக்கி விக்கியழுதார். அவற்றை வெள்ளைத் தாடியாலை கண்ணீர் ஓடிவந்து சூடாக என் கைகளில் துளித்துளியாய் விழுந்தது. நாங்களும் அழுதோம்!... திரும்பிப் பார்த்தேன். அப்பா கண்ணில் நீர்வழிய நின்றார். அப்பா! இப்ப... அழுது என்ன செய்யிறது? எங்கடை அம்மாவை நினைச்சால் பாவம்தான்! இப்ப இவ்வளவு பக்திமானாய் இருக்கிற அப்பப்பா ஒரு கொலைகாரனா?.. சீ அப்படி நினைக்கக்கூடாது. என்ரை நினைப்பை அறுத்து எறிஞ்சு போட்டு நிமிர்ந்து பார்த்தேன்! அக்காவைக் காணவில்லை... அங்கை வாறாள் கையிலை எண்ணெய்ப் போத்தல்... ஓ! வைரவருக்கு விளக்கு வைக்கப் போறாள்... "அப்பப்பா வாங்கோ சாமி கும்பிடுவம்!" நான் அப்பப்பாவை கூட்டிக் கொண்டு போனன். அப்பாவும் கூட வந்தார். அக்கா விளக்கேற்றினாள். நான் ஓடிப் போய் பூப்பறித்து வந்து அப்பப்பாவிடம் கொடுத்தேன். அப்பா கர்ப்பூரம் கொளுத்தினார்... அப்பப்பா பாடத்தொடங்கினார்.

"கூற்றாயினவாறு விலக்ககவீர் கொடுமைபல செய்தன நானறியேன் ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதும்...." நானும், அக்காவும் அவரோடு சேர்ந்து பாடினோம்...

மண்டபத்தில் ஒலிபெருக்கியில் இப்போ அக்கா அந்தத் தேவாரம் பாடுகிறாள். இன்னும் அப்பா வரவில்லையே? எனக்கு யோசனையாக இருந்தது. ஐயையோ அங்கை அதிபர் வாறார்! நான் இனி இஞ்சை நிக்க முடியாது.. மெல்ல நழுவி சுவருக்குப்பின்னால் நிற்கிறேன். அதிபர் போய்விட்டார் நான் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு வெளியே வந்து மீண்டும் அப்பாவைத் தேடுகிறேன். விழாவுக்கு பலர் வந்து கொண்டிருக்கிறார்கள். என் நினைவு வீட்டிற்குத்தாவுகிறது. சென்ற ஆண்டு நான் பாடசாலையில்



சேரவேண்டும். திடீரென அப்பப்பாவுக்குச் சுகவீனம் வந்து விட்டது. படுக்கையில் விழுந்துவிட்டார். வீட்டில் சமையல் செய்ய ஆளில்லை. அம்மா இல்லாத குறை நல்லாத் தெரிஞ்சுது. அப்பாவும் அப்பப்பாவும் இரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒட்டி நிண்டு கேட்டுப்பார்த்தேன். எனக்குக் கேட்காமல் மெல்லப் பேசினார்கள். ஒருநாள் அந்த இரகசியம் வெளியாகி விட்டது. என்னையும், அக்காவையும் சிறுவர் இல்லத்தில் சேர்க்க முடிவு செய்து விட்டார்கள். உடனே அதை நிறைவேற்றி விட்டார் அப்பா! நானும் அக்காவும் போக மாட்டோம் என்று அழுதோம். அப்பப்பா தான் எங்களுக்கு விளக்கம் சொன்னார். "குஞ்சுகள்! நீங்கள் கறிவேப்பிலைக் கொழுந்துகள்! சரியான பாதுகாப்பிலை வளரவேண்டும். நான் இனி எழும்பி நடக்க மாட்டன். என்ரை பாவம் என்னை வருத்துது. நீங்கள் இல்லத்திலை போயிருந்து படிச்சால் எனக்கு மனநிம்மதியாக இருக்கும். என்ரை கடைசிக் காலத்திலை நிக்கிறன் மேனை!" எண்டு அழுதார். அவருடைய அழுகை எங்கடை மனதை மாற்ற, நாங்கள் இருவரும் சிறுவர் இல்லம் சேர்ந்தோம். அப்பா மட்டும் தவணைக் கொருமுறை எங்களை வந்து பார்ப்பார்.

அப்பாவிடம் அப்பப்பாவைப் பற்றியே துருவித்துருவிக் கேட்போம்! வேறு கதை கதைப்பதில்லை. என்ன! இன்னும் அப்பா வரவில்லை... மண்டபத்தில் அக்காவின் தேவாரம் கேக்குது. அந்தத் தேவாரம்... அதைப்பாடினால் நினைத்தது நடக்கும். அப்பப்பா அடிக்கடி சொல்லுவார். எனக்கு நினைவுக்குவர நானும் அக்காவின் குரலோடு இணைந்து வாய்விட்டே பாடத் தொடங்கினேன்! இதுவோ! எமை ஆளுமாறு... அக்கா உருகிப்பாடுகிறாள். அது என்னையும் தொற்ற கண்ணில் நீர்த்துளி வெளிவர நான் பாடிக்கொண்டே வாசலைப் பார்த்தேன். ஆவடுதுறை அரனே!.. பாடல் முடிய பார்வையில்... வாசலில் கடவுளே!... அப்பப்பா தடியூன்றி நடந்து அப்பாவுடன் வருகிறார்! நான்... அங்கே கடவுளைக் கண்டேன். கண்ணில் நீர் பெருகிற்று.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# தாய் சேய் நலம்



குழந்தைகளுக்கு தாய்ப்பால் முக்கியமாகத் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்று. குழந்தைகளுக்குப் பாலூட்டுவது தாய்க்கும் குழந்தைக்கும் சரியான பிணைப்பை ஏற்படுத்துகிறது. குழந்தைகளுக்குப் பாலூட்டுவதால் தாயின் உடம்பில் எவ்வித இழப்பும் ஏற்படுவதில்லை.

தாய்மார்களில் சிலர் அறியாமையினாலும் வேண்டிய வசதி இல்லாமையினாலும், தேவையான சக்தி இல்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். எமது நாட்டில்தான் குழந்தைகளுக்கு சில தாய்மார்கள் ஆறுமாதம் முதல் மூன்று வயது வரை தாய்ப்பால் கொடுக்கிறார்கள். அச்சமயங்களில் கருத்தரிப்பது குறைவாகக் காணப்படுகின்றது. சிலவேளைகளில் கருத்தரிப்பதுமுண்டு. இங்கு பிறந்த குழந்தையின் சராசரி நிறை 2 கிலோ 700 கிராமாக இருக் கிறது. ஆனால், அமெரிக்காவில் பிறந்த குழந்தையின் நிறை 3 கிலோ 700 கிராமாக இருக்கிறது. இந்தநிலை மாற வேண்டும். ஏழைத்தாய்மார்களில் 30% குழந்தைகள் குறைப்பிரசவமாகத்தான் இருக்கின்றது எனக் கணிப்பிட்டிருக்கின்றார்கள்.

சுகாதாரமற்ற சூழ்நிலையில் வளரும் குழந்தைக்கு சுத்தமான உணவு கிடைப்பதில்லை. இதுவே குழந்தையின் வயிற்றுப்போக்கு நோய்க்கு முக்கிய காரணமாக அமைகின்றது. தாய்ப்பால்தான் சுத்தமாகக் கிடைக்கும் உணவாகும்.

**தாய்ப்பால் ஏன் சிறந்தது**

- தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைக்கின்றன.
- உடனடியாகக் கிடைப்பதுடன், சுத்தமாகவும், தொற்றுக்கள் இல்லாமலும் சூடாகக் கிடைக்கின்றன.
- குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் இடுப்பு தானாகவே சுருங்கி பழைய நிலையை அடைகின்றது.
- வேண்டிய அளவு தாய்ப்பாலில் எதிர் உயிரி இருப்பதால் குழந்தையை நோய் தாக்குவது தவிர்க்கப்படுகிறது.
- தாய்ப்பால் மூலம் தான் குழந்தைக்கும், தாய்க்குமிடையில் பாசப்பிணைப்பு ஏற்படுகின்றது.
- குழந்தைக்கு தாய்ப்பாலை ஊட்டுவதால், இலகுவாக மலப்போக்கு ஏற்படுகின்றது. அத்துடன் குழந்தையின் மலத்துவாரத்தில் ஏற்படும் புண்கள் தானாகவே சரியாகிவிடுகின்றன.
- இயற்கையாகவே கிடைப்பதால் சேமித்து வைக்கப் பாத்திரங்கள் தேவையில்லை. நேரடியாகவே குழந்தையின் வாயில் ஊட்டிவிட முடிகின்றது.

**தாய்ப்பால் ஊட்டுவதிலுள்ள சிரமங்கள்**

- தாய்ப்பால் கொடுப்பதற்கு தாய் தேவை.
- சில தாய்மார்களுக்கு போதிய அளவு பால் சுரக்காமை.
- கூடுதலாக கவலைப்படும் தாய்மார்களுக்கு பால் சுரப்பது நின்றுவிடலாம்.
- பாலை ஒழுங்காக அகற்றாவிட்டால், பால் கட்டிவிடுகின்றது. இதனால், மார்பில் வேறு நோய்கள் வரக்கூடும். சிலவேளைகளில் வலி ஏற்படும்.

**குழந்தைக்கு உணவு**

குழந்தை பிறந்து 24 மணித்தியாலம் முதல் 48 மணித்தியாலம் வரை எவ்வித உணவும் தேவையில்லை. தாயின் மார்பில் முதல் மூன்று நாட்களுக்கு பாலுக்குப் பதிலாக மஞ்சள் நிறமுள்ள ஒரு திரவம் வெளிவருகின்றது. இதனை குழந்தைகளுக்கு கொடுப்பதில் தப்பு ஒன்றும் கிடையாது. இவ்வாறு வெளிவரும் மஞ்சள் நிறத்திரவம் - சாதாரணபாலைவிட மிகவும் சக்திவாய்ந்தது. அகவே, குழந்தைக்குக் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும். அதிகளவு பால் சுரக்கவில்லை என்றால், கற்கண்டு நீரினை குழந்தைக்குக் கொடுக்கலாம். ஒரு மாதம் சென்றவுடன் பசுப்பாலில் நீரினைக் கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். சிலர் நான்கு மணித்தியாலத்திற்கு ஒருமுறை பால் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர் - அது தவறு. அரைமணித்தியாலத்திற்கு ஒருமுறை கொடுக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

# வெற்றி நிச்சயம்

வாழ்க்கையில் தோற்றுவிட்டேன் என்று தீர்மானம் செய்துகொண்டவனுக்குத் தோல்வி தான் கிட்டும்

முயற்சி செய்யமுடியாது என்று நினைப்பவன் முயற்சி செய்வதையே விட்டுவிடுவான்.

வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப்பட்டும் வெற்றி கிடைக்கப்போவதில்லை என்று கருதுபவனுக்கு வெற்றி கிடைக்காது.

வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று உறுதியாக நினைப்பவனுக்குத்தான் அவன் பின்னாலேயே வெற்றி தொடர்ந்து செல்லும்

ஒருவருடைய மனநிலையையும், உழைப்பையும், சந்தர்ப்பத்தையும் பொறுத்துத்தான் வெற்றி அமையும்.

போராட்டங்களின் சாதகமான விளைவு பலசாலிகளுக்குத்தான் கிடைக்கும் என்று நினைப்பது தவறு.

விரைவிலோ, காலம் கடந்தோ வெற்றி நிச்சயம் கிடைக்கப்போகிறது என்ற தளரா நம்பிக்கையுடன் செயல்படுபவனுக்குத்தான் வெற்றி உறுதியாகக் கிடைக்கும்.

# இந்த வார பலன்கள்

## 21.05.2004 - 27.05.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | புத ராகு | சூ சந் | செவ் சுக் சனி |
| யுரே | 21 ப. 2.13 மிது-சந்<br>23 பி.இ 4-56 கட.சந்<br>26 ப. 2-10 சிங்-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசி அன்பர்களே உங்களுக்கு தொழில் முயற்சிகளில் பிரயாசை கூடுதலாகக் காட்டும். குடும்பத்தில் இடையிடையே பிணக்குகள் ஏற்படக்கூடும். வருமானம் ஓரளவு வந்தாலும் செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். புத்திரர்களால் சிரமங்கள் தோன்றும். சில சந்தர்ப்பங்களில் சிலர் ஏமாற்றப்படவும் இடமுண்டு. குடும்பப்பெண்கள் நிம்மதிக் குறைவுடன் காணப்படுவார்கள். நீங்கள் எல்லா விஷயத்திலும் அவதானமாக இருக்கவேண்டும். திருமணப் பேச்சுக்கள் தாமதப்படும். வர்த்தகர்கள் நிதிநெருக்கடியைச் சந்திக்க நேரிடும். பங்கு முதலீடுகள் பிரச்சினையைக் கொடுக்கலாம். தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறையும். தனித்தொழில்புரிவோர் நன்மையடைவார்கள். மாணவர்கள் சோம்பல்தன்மை உடையவர்களாகக் காணப்படுவர். தேவையில்லாத பிரச்சினைகளில் இருந்து விலகிக்கொள்ளவும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்துள்ள நண்பர்களே உங்களுக்கு இவ்வாரம் குழப்பங்கள் ஏற்படலாம். குடும்பத்தில சில கருத்துவேற்றுமைகள் ஏற்படக்கூடும். செலவுகளும் அதிகமாகவே காட்டும். பொதுவாக பற்றாக்குறை இருந்துகொண்டேயிருக்கும். குடும்பப் பெண்களுக்கு பலவித பொறுப்புக்கள் ஏற்படும். எல்லாவற்றையும் சமாளிக்கவேண்டி ஏற்படும். இறை நம்பிக்கை, வழிபாடு என்பன கைகொடுக்கும். வர்த்தகர்களுக்கு இலாபம் குறைவாகவே காட்டும். நாளடைவில் நன்று. தொழில் புரிவோர் திடீர் நெருக்கடிகளைச் சமாளிக்கவேண்டியேற்படும். எதிர்ப்புகளைப் பற்றிக் கவனமாக இருக்கவும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறைவாகவே இருக்கும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்த அன்பர்களே உங்களுக்கு ஏழரைச்சனி நடுப்பகுதி நடந்துகொண்டிருக்கிறது. பல துன்பங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். குடும்பத்தில் பிணக்குகள், கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். தேகசுகம், குடும்ப சுகம் பாதிப்படையக்கூடும். வைத்தியச் செலவுகளும் அதிகரிக்கும். எப்படி உழைத்தாலும் செலவுக்குப் போதாமலிருக்கும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதமாகும். வர்த்தகத் துறையினருக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே நடக்கும். கொடுக்கல் வாங்கல் கஷ்டம் இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். போக்குவரத்தில் அவதானம் தேவை. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைவடையும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



உங்களுக்கு ஏழரைச் சனி ஆரம்பம் இருந்தாலும் குரு 2 ஆம் வீட்டிலிருந்து பல நன்மைகளைச் செய்வார். குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படும். இனபந்துக்களால் நன்மைகளும் பெரியோர்களின் வாழ்த்துக்களும் கிடைக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படும். தேகாரோக்கியம் திருப்தியாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் திருப்தியளிக்கக்கூடியதாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மேலோங்கும். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு பெருகும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கலாம். மாணவர்கள் சிறப்பான முன்னேற்றத்தை அடைவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் ஜனனமான அன்பர்களே, உங்களுக்கு ஜென்ம வியாழன் நடந்துகொண்டிருப்பதால், குடும்ப அங்கத்தவர்களிடையே சச்சரவுகள் தோன்றும். நிம்மதிக்குறைவு ஏற்படும். பணவரவிலும் பார்க்க செலவு கூடும். இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படலாம். புத்திரர்கள் வழியில் விரோதங்கள், துன்பம். பொருள் செலவு ஏற்படலாம். பேச்சில் நிதானம் தேவை. திருமணம் காலதாமதத்தை ஏற்படுத்தும். வர்த்தகர்கள் தமது பழைய முதலீடுகளை விற்பனை செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவர். வாடிக்கையாளர்களைக் கவர வழிசெய்யவேண்டும். உத்தியோகத்தர்கள், அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகவேண்டியிருக்கும். மாணவர்கள், ஆசிரியர் வெறுப்புகள் ஏற்படலாம். கல்வியில் ஊக்கம் தேவை.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்த சகோதரர்களே, உங்களுக்கு வியாழசுகம் குறைவாக இருந்தாலும் அதிக பாதிப்புக்கள் இல்லை. குடும்ப நல்லுறவு பாதிப்படையாது. தொழில்மூலம் வருவாய் வந்துகொண்டிருக்கும். புத்திரர்களால் உதவி அவ்வப்போது கிடைக்கும். வெளிநாட்டிலுள்ள உறவினர்களும் உதவுவார்கள். சிலருக்கு வெளியிலிருந்து சுபசெய்தி கிடைக்கும். திருமணப் பேச்சுக்களில் இழுபறிகள் இருந்தாலும் அவை தீர்க்கப்பட்டு விரைவில் கருமம் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூடிய நன்மையடைவார்கள். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். பொறுப்புக்கள் அதிகரிக்கும். மாணவர்களுக்குக் கல்வித் தேர்ச்சி உண்டு. உயர்கல்வி கற்க வாய்ப்பு ஏற்படும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலா ராசியில் ஜனனமான அன்பர்களே, உங்களுக்கு 11 இல் குருபகவான் சஞ்சரிப்பதால் பல நன்மைகளைச் செய்வார். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே ஐக்கியம் வலுக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை, அமைதி தென்படும். பொருளார நிலை திருப்தியளிக்கும். சில சந்தர்ப்பங்களில் தேகசுகக்குறைவு தென்பட்டாலும் பாதிப்பில்லை. பெரியோர்களின் ஆசி உண்டு. திருமண நிகழ்வுகள் கைகூடும் வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி நிலவும். உத்தியோகத்தினருக்கு தொழில் சிறப்பும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் உண்டு. மாணவர்களிடையே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் உதித்த அன்பர்களே, உங்களுக்கு அட்டமத்து சனியும், 10 இல் வியாழனும் நடக்கிறது. தொழில் முயற்சிகளில் பிரயாசை கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் சிறுபிரச்சினைகள், பிணக்குகள் அவ்வப்போது தோன்றும். புத்திரர்களால் கவலை ஏற்படும். செலவுகள் அதிகமாகக் காட்டும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். வைத்தியச்செலவுகளும் கூடும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் கொடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபரம் மந்த நிலையைக் காட்டும். எனினும், அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் இலாபமடைவர். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். குறிப்பிட்ட பணிகளை செவ்வனே ஆற்றமுடியாமலிருக்கும் மாணவர்களுக்கு முன்னேற்றம் மந்தமாகவே இருக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியில் பிறந்த அன்பர்களே, உங்களுக்கு வியாழ பகவானின் பார்வை இருப்பதால், நற்பலன்களே நடக்கும். தொழில்துறை விருத்தியடையும். குடும்பத்தில் இல்லற சுகம், களத்திரசுகம் நன்கு அமையும். பணவருவாய் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் கைகூடி மங்கள வாழ்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்படையும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். நிதிநிலைமை நன்றாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்ச்சி உண்டு. அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைந்து பரீட்சைகளில் சித்திபெறுவார்கள்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசி அன்பர்களே, உங்களுக்கு அட்டமத்து வியாழன் நடக்கிறது. நன்மை, தீமை கலந்த பலன்காணும். குடும்பத்தில் நல்லுறவு ஏற்படும். உறவினர்களிடையே சச்சரவுகள் தோன்ற இடமுண்டு. புத்திரர் வழியால் செலவு அதிகமாகும். மனக்கஷ்டங்களும் தவிர்க்கமுடியாமலிருக்கும். தொடங்கும் கருமங்கள் அலைச்சலையும், தாமதத்தையும் கொடுக்கும். பணவருவாய் இருப்பினும், செலவு கட்டுக்கடங்காமல் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடந்தாலும், இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். திருமணப் பேச்சுக்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகமாகும். முன்னேற்றங்கள் தடைப்படும் மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப பெறுபேறுகள் கிடைக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்த சகோதரர்களே, உங்கள் ராசியை குரு நோக்குவதால், பல நன்மைகள் கிட்டும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். நண்பர்கள் உறவினர்களின் உதவி கிட்டும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். வெளியிலிருந்து சுபசெய்திகள் வரும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. திருமணம் போன்ற சுபகருமங்கள் கைகூடும். வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். புதிய முதலீடுகள் இலாபத்தைக் கொடுக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. மாணவர் மத்தியில் அறிவு வளர்ச்சியடையும். தொழில் வாய்ப்புகள் சிலருக்கு கிடைக்கலாம்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்த நண்பர்களே, உங்களுக்கு இவ்வாரம் ஓரளவு நற்பலன்கள் நிகழும். குடும்பத்தில் நல்லுறவு மேலோங்கும். இனபந்துக்கள், அயலவர்கள் ஆகியோரின் உதவி உண்டு. தேகாரோக்கியம் நன்று. பணவருவாய் தேவைக்கேற்ப இருக்கும். எதிர்பார்த்த கருமங்கள் சிறப்பாக அனுகூலமாகும். விவாகப் பேச்சுக்கள் தாமதத்தின்மேல் நிறைவுபெறும். வர்த்தகர்களுக்கு வருவாய் அதிகரிக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். வேலைப்பளு குறையும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

---

**மூலிகையியல்** — **எஸ்.ஜெயா**

# மூலிகைகளும் அவற்றின் நோயெதிர்ப்பு சக்திகளும்

***மனித வாழ்க்கையில் உடல்நலவாழ்வும், மூலிகை மருத்துவமும், உணவுவகைகளும் மிகமுக்கியமானது. என்றாலும் எதனையும் சிறந்த மருத்துவ ஆலோசனையுடன் உள்ளெடுப்பதே தனிமனித ஆரோக்கியம் என்பதனூடாக சமூக ஆரோக்கியத்தை வளம்படுத்தும்.***

**தென்னங்குருத்து**

இரத்தமூலம், கணச்சூடு, பெரும்பாடு இவை நீங்கும். இவற்றிற்கு இளசான தென்னங்குருத்தை பட்டையுடன் தென்னம்பனலில் பிழிந்த சாற்றை அரை அவுன்ஸ் எடுத்துக் கொடுக்கலாம். ஆனால், மலபந்தம் உண்டு. நீடித்துக் கொடுக்கக்கூடாது.

**வேர்க்கடலை.**

இரத்தமூலம் போகும். தாது பஷ்டி, தேகப் பெருக்கம், பித்தவாய்வு உண்டாகும். சக்கரை சேர்த்து உண்டால் தேகத்தை போசிக்கும். தாது விருத்தியடையும். மலம் இலகுவாகப் போகச்செய்யும்.

**வெற்றிலை**

கபம், சீதளம், துர்க்குணம் திரிதோஷகோபம் இவை ஒழியும். இலையில் நல்லெண்ணை தடவி குழந்தையில் மார்பில் போட்டுவைக்க கபத்தைக் குறைத்து இருமல், இழுப்பு மூச்சு முட்டல் இவைகளைக் குணமாக்கும்.

**வசம்பு**

இதன் சூரணத்தை தேனில் கலந்து உண்டால் கபத்தையும், வாயுவையும் நீக்கும். வலி, சூலை, சன்னி, காசம் மலக்கிருமி, குன்மம் இவை நீங்கும் எனக் கூறப்படுகிறது.

**மாவிலங்கை**

இதன் பட்டை சூரணத்தைக் கொதிக்கும் நீரில் இட்டு இரண்டுவேளை கொடுக்க சூரல், சூலை குன்மம் கண்டமாலை பிளவை வீக்கம் வாதம், தாகம், கல்லடைப்பு, சன்னி, புண்புரைகள் குணமாகும்.

**மருது**

மயக்கம், பெருவியாதி, கிருதிரோகம், ஆபாசம் இவை நீங்கும். பட்டை சூரணத்தை சர்க்கரை காட்டி தினமும் வெறுவயிற்றில் ஒரு வேளை கொடுத்துவர இருதய சம்பந்தமான பல வியாதிகள் குணமாகும்.

**மருதோன்றி**

இந்த இலையை அரைத்து, நல்லெண்ணையில் கலக்கி, காய்ச்சி வடித்து கூந்தலுக்கு தடவிவர, முடி செழிப்பாக வளரும். இதன்வேரை பாலில் அரைத்து, வடிகட்டி சாப்பிட குன்மம் நீங்கும். ஒரு களஞ்சு வேரை ஊறவைத்து சுண்டக்காய்ச்சி 40 நாள் சாப்பிட குஷ்டம் தவறாமல் நீங்கும். காமாலை, கல்லடைப்பு நீரடைப்பு இவை குணமாகும்.

**மஞ்சள்**

மஞ்சளுடன் வேப்பிலை சேர்ந்து அரைத்துப் பூசிவந்தால் சொறி, படை, சிரங்கு குணமாகும், பித்த கபவாத ரோகங்கள் தலைவலி வீக்கம் சலதோசம் பெருவிரணம் இவை நீங்கும். மரணமஞ்சள், மூலநோய் உட்சுரம், கரைச்சுரம், விஷம் என்பன நீங்கும். கஸ்தூரி மஞ்சளை முகத்துக்கு பூசிவர முகம் பூரிப்படைந்து வெண்மையாகப் பிரகாசமாகக் காட்சி தருவதோடு, முகப்பருக்களை நீக்கி தேவையற்ற முடிகளை உதிரச்செய்யும். உணவில் சிறுமஞ்சளை தினமும் சேர்த்துவந்தால் உடல் அழகுபெறுவதோடு - வயிற்றுநோ, புண் என்பன குணமாகும்.

**கற்றாளை (குமரி)**

உள்சோற்றை சிறு துண்டாக வெட்டி, ஏழுதரம் கழுவி, கற்கண்டு தூளில் தோய்த்து சாப்பிடவேண்டும். இதன்மூலம் கண், கை, கால் எரிச்சல் நீங்கும். மலச்சிக்கல் காரணமாக முதுகுவலி, தலைவலி, ஏற்படுபவர்களும், மூலநோய் உள்ளவர்களும் இதனை உண்டு பலன் காணலாம். அத்தோடு கற்றாளைச் சாற்றினை தலைக்குத் தேய்த்து முழுகுவதன் மூலம் உடல் குளிர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கீழ்க்காய் நெல்லி**

காமாலை, தாதுவெப்பம், மேகப்புண் (பாலுறுப்பு), நேத்திரரோகம் என்பவற்றை நீக்க சமூலத்தை அரைத்து பாக்குப் பிரமாணம் பாலில் சாப்பிட - சோகை, காமலை வாதப் பித்த ரோகங்கள் குணமாகும். இரத்த விருத்தி ஏற்படுவதுடன் கண்கள் குளிர்ச்சிபெறும்.

---

**திருத்தி வாசிக்கவும்**

*நேற்று வெளியான 'ஊடகவியலாளர் பயிற்சிநெறி குறித்த சில எண்ணக்கருக்களும், சந்தேகங்களும்' என்ற 'பரதேசி'யின் கட்டுரையில் நாலாவது பத்தியின் முதலாவது பந்தியின் இறுதியில் செய்தியாளர்கள் 'உள்வாங்கப்பட்டமையை இட்டு' என வந்துள்ளது.*

*இதனை 'உள்வாங்கப்படாமையை இட்டு' என திருத்தி வாசிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம் தவறுக்கு வருந்துகிறோம்.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்*
*எழுவது கோடி உறும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## 'நிதி' யைத் தேடும் அரசின் சமாதான முன்னெடுப்புக்கள்...

இலங்கை அரசாங்கத் தரப்பினருடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தனது சந்திப்புக்களையும், பேச்சுவார்த்தை களையும் முடித்துக்கொண்ட ஜப்பானிய விஷேட தூதுவர் யசுஷி அகாஷி, கொழும்பிலுள்ள கில்டன் ஹோட்டலில் பத்திரிகை யாளர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்.

அவரது இந்த நான்கு நாள் விஜயமானது புதிய சுற்று பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளத்தை உருவாக்குவதையும் சம்மந்தப்பட்ட இருதரப்பினரதும் சமகால சமாதானம் தொடர் பாக எத்தகைய நிலைப்பாட்டினை கொண்டுள்ளார்கள் என் பதை அறிந்து கொள்வதையும் நோக்கமாகக் கொண்டி ருந்ததுடன், எதிர்கால சமாதான முன்னெடுப்புக்கள் எதிர் கொள்ளவேண்டியிருக்கும் தடைகளையும், முரண் நிலைகளை யும் நீக்கும் வழிகளை ஆராய்வதற்காகவும் இருந்தது என்றே அறியவந்துள்ளது.

கடந்த வருடம் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ உச்சிமாநாட்டில் விடுதலைப் புலிகளை கலந்து கொள்ளவைத்து ஒரு இராஜதந்திரப் பொறிக்குள் சிக்க வைக்க இதே சிறப்புத்தூதுவர் யசுஷி அகாஷி எடுத்த பகீரதப் பிரயத்தனம் தோல்வியுற்ற பின் சில தடைவைகள் அவர் வன்னி வந்து விடுதலைப் புலிகளை சந்தித்துப் பேசியுள்ளார். அப்போ தெல்லாம் பேச்சுவார்த்தை நகர்வுகள் ஒரு ஸ்தம்பிதமான நிலையை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் பங்கேற்க மறுத்த உச்சிமாநாடு அப்போதைய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு கிடைத்த மாபெரும் சர்வதேச அளவிலான வெற்றியென பெரிதும் விவாதிக்கப்பட்டது.

ஆனால், இந்த மாநாடு குறித்து தனக்கு எதுவும் தெரியாதென்று அப்போது தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா மாநாடு வெற்றி பெற ஆசீர்வாதம் வழங்குமாறு கேட்டபோது ஜப்பானின் அந்தக் கோரிக்கையை எரிச்சலுடனும் சினத்துடனும் நிராகரித்தும் இருந்தார்.

இந்த மாநாட்டின் முடிவில் இலங்கையரசு ஒருபோதுமே எதிர்பார்க்காத அளவு பெருந்தொகையான கடன் நிதியுத விகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தபோதும், அதனை சமாதானத்தின் பேரால் மட்டுமே கொடுக்கப்படும் என்ற நிபந்த னையையும் அந்த நாடுகள் விதித்தமையானது இலங்கை அரசு எதிர்பார்க்காத ஒன்றாகவே அமைந்தது.

அப்போது அந்த ஜப்பானிய உச்சிமாநாடு சமாதானத்தின் பேரால் ரணில் அரசை பலப்படுத்துவதையே இலக்காக கொண்டி ருந்தது உண்மையே...!

ஆனால், அந்த இலக்கை அவர்கள் எட்டவும் ரணில் அரசு அந்த நிதியை பெற்றுக்கொண்டு வெறுமனே சமாதானம் குறித்து வாய்ச்சவடால் அடித்துக்கொண்டு தனது ஆட்சியை பலப்படுத்திக்கொள்ளவும், சந்திரிகாவினதும் அவரின் பின்னால் அப்போது அணிதிரண்டிருந்த சமாதான எதிர்ப்பு பேரினவாதக் கும்பல்களும் அனுமதிப்பவர்களாக இருக்கவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இதே சர்வதேசம், இதே ஜனாதிபதிக்கு 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற பெயரிலான தமிழ் மக்களுக்கெதிரான போரை முன்னெடுக்க நிதிரீதியாகவும் வேறுவகையிலும், பெருமளவு கடனை அள்ளிக் கொடுக்கவே செய்தது.

ஆனால், ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிப்பீடம் ஏறியதும், இதே சர்வதேசம் வேறுவகையில் வேறு தேவைகளின் அடிப்படையில் தனது குரலை மாற்றிக்கொண்டு சமாதானத்தின் பேரில் நிதியை வாரிவழங்க முன்வந்தமையானது, முரண் நகையான விடயமாக இருந்தாலும், எல்லாவகையிலும், எல்லாவித அணுகுமுறையினாலும், இலங்கையின் ஆளும் வர்க்கத்தை அந்தந்த காலகட்டத்தின் தேவைகளுக்கேற்ற பாதுகாப்பதையே இலக்காகக் கொண்டதாக இருக்கிறது. என்பதை எவராலும் நிராகரித்துவிடமுடியாது.

ஒரு காலத்தில் இதே ஜப்பானிய விசேட தூதுவரை சந்திக்க மறுத்து அவரை அகௌரவப்படுத்திய சந்திரிகா, இப்போது அவர் எத்தனை தடவை வந்தாலும் இராஜதந்திரப் புன்னகையுடன் அவரை வரவேற்று சந்தித்து உரையாடத் தயாராகவே இருக்கிறார் என்றால், சந்திரிகாவுக்குச் சமாதானம் மீது பற்றுறுதி ஏற்பட்டுவிட்டதென்பது கருத்தல்ல....

மாறாக சமாதர்னத்தின் பேரால் ஜப்பான் உச்சி மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட பெருந் தொகையான கடன்நிதி அவர்களுக்கு இப்போது மிக மிக அவசரமாக தேவைப்படுகிறது என்பதே அர்த்தமாகும்.

தற்போது வருகைதந்த அகாஷி - சமாதானப் பேச்சுக்கள் சாதகமான திசையில் சென்றாலேயே அடுத்த கட்ட சர்வதேச நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவது குறித்து ஆராயப்படும் என்று கூறியுள்ளமையானது அரசு விரும்பினாலும், விரும்பா விட்டாலும் அரசுடன் இணைந்து இயங்கும் ஜே.வி.பி போன்ற சமாதான விரோத சக்திகள் ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும ஹெல உறுமயவினர் எதிர்த்தாலும், எதிர்க்காவிட்டாலும் சரி, சமாதானப் பேச்சுக்களை ஏதோவொரு வகையில் முன்னெடுத்துச் செல்லவேண்டிய அழுத்தம் ஜனாதிபதிக்கும் புதிய அரசுக்கும் இருக்கச்செய்கிறது.

இதனை ஜனாதிபதி சமாதான முயற்சிகள் தொடர்பான அவரது பற்றுறுதியை தன்னிடம் வெளிப்படுத்தினார் என அகாஷி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததன் மூலம் உணர முடியும்.

யார், யார் தேவைப்படாதவர்களாக, வெறுப்புக்குரியவர்களாக ஜனாதிபதிக்கு முன்னர் தென்பட்டார்களோ அவர்கள் எல்லாம் இப்போது அவரின் அன்புக்குரியவர்களாக மாறிவிட்டார்கள்....

அதுவும், சமாதானத்தின் பேரால் வழங்கப்படும் 'நிதி'யின் பேரால் மட்டும்....

இது நிரந்த சமாதானத்திற்கான அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் வகையிலான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கப் போவதில்லை.

# நாடும் நடப்பும்




# ஹக்கீமுக்கு எதிரான குற்றச்சாட்டை கண்டித்து அம்பாறையில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு, எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட சதிமுயற்சியைக் கண்டித்து, அம்பாறை மாவட்டமெங்கும், இன்று ஊர்வலங்களும் ஆர்ப் பாட்டங்களும் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை அடுத்து, இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சகல பள்ளிவாசல்களிலும், நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் அரசியல் சொத்தான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை தனிப்பட்ட அரசியல் லாபத்தை கருத்திற்கொண்டு, அதனை பிளவுபடுத்தி முஸ்லிம்களையும், தலைமைத்துவத் தையும் பிரித்து, கட்சியை சின்னாபின்னப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் அம்பலமாகியுள்ளன. இது யாரால் மேற்கொள்ளப் பட்டது என்பதனை சகல முஸ்லிம்களும் தெரிந்து கொண்டுள்ளார்கள். இதனைக் கண்டித்தே இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஹக்கீமுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள. இந்த சதிமுயற்சி முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய தேசத்துரோகம் என, அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் கூறியுள்ளனர்.

அப்பட்டமான இந்தப் பொய்யை விசாரிக்காமல் அம்பலப் படுத்திய ஊடக நிறுவனங்களையும் கண்டித்து, இந்த ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் மாவட்ட மெங்கும் கடைகளை அடைத்து, கறுப்புக்கொடிகளை தொங்க விடுமாறு, முஸ்லிம்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சதிமுயற்சியை மேற்கொள்ள முனைப்புடன் செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் சில எம்.பிக் ளின் கொடும்பாவிகளும் எரிக்கப்படவுள்ளன. அத்துடன், இச் சதிமுயற்சிக்கு எதிராக சட்டரீதியாக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் முஸ்லிம் காங்கிரஸை மக்கள் கேட்டுள்ளனர்.

## இடம்பெயர்ந்தோரின் அடையாள அட்டைகளை யாழ்.செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்!

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த இடம் பெயர்ந்தோரின் தேசிய அடையாள அட்டை குறித்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும், உரியவர் கள் இல்லாத காரணத்தினால், அவை திருப்பியனுப்பப்பட்டுள் ளன. இவ்வாறு திருப்பியனுப்பப்பட்ட அடையாள அட்டைகள் தற்போது, யாழ். செயலக ஆட்பதிவு திணைக்களத்தில் உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்க ளின், அடையாள அட்டைகள் அவர்களது பிரதேச செயலகங் களுக்கு, அனுப்பிவைக்கப்பட்டு உரியவர்கள் இல்லாத கார ணத்தினால், திருப்பியனுப்பி வைக்கப்பட்டன. இதன் அடிப் படையில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 69 அடையாள அட் டைகளும் தெல்லிப்பளையைச் சேர்ந்த 58 அடையாள அட் டைகளும் நல்லூரைச் சேர்ந்த 102 அடையாள அட்டைகளும் பருத்தித்துறையைச் சேர்ந்த 21 அடையாள அட்டைகளும், வேலணையைச் சேர்ந்த 119 அடையாள அட்டைகளும், மருதங்கேணியைச் சேர்ந்த 16 அடையாள அட்டைகளும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த 137 அடையாள அட்டைகளும், உடுவிலைச் சேர்ந்த 15 அடையாள அட்டைகளும், சாவ கச்சேரியைச் சேர்ந்த 51 அடையாள அட்டைகளும், சங்கா னையைச் சேர்ந்த 50 அடையாள அட்டைகளும், திருப்பிய னுப்பிவைக்கப்பட்டுள்ளன.

திருப்பியனுப்பப்பட்டு யாழ். செயலகத்தில் அனுப்பிவைக் கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்களின் பெயர்கள் யாழ். செயலக ஆட்பதிவுத்திணைக்களத்தில் உள் ளன. உரியவர்கள் நேரில் சென்று இந்த அடையாள அட்டைக ளைப்பெற்றுக்கொள்ளமுடியும். இதேவேளை - மன்னார், திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாவட்டங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்தவர்களின் 53 தேசிய அடையாள அட்டைகளும் யாழ். செயலகத்தில் உள்ளன. இவற்றை உரியவர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ளமுடியும் என ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

### கந்தப்பொல வன்முறைச் சம்பவம்

## தொடர்புடையவர்களைப் பதவி விலக்க மலையக மக்கள் முன்னணி கோரிக்கை

கந்தப்பொலவில் தமிழர் மீதான வன்முறையில் ஈடுபட்ட பொலிஸாரையும், உயரதிகாரிகயையும் இடமாற்றம் செய்வதால், இத்தகைய பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுவிடப்போவதில்லை. இவர்களைப் பதவியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மலையக மக்கள் முனனணியின் கொழும்புக் கிளையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கந்தப்பொல சம்பவம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவ டிக்கைகள் குறித்து மலையக மக்கள் முன்னணியின் கொழும் புக் கிளையில், கடந்த திங்கட்கிழமை இந்தக் கலந்துரையா டல் இடம்பெற்றது.

கந்தப்பொல சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும் பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றையும், எதிர்ப்புக் கூட்டம் ஒன்றையும் நடத்தவேண்டும் என்றும், இங்கு கருத்து தெரிவிக் கப்பட்டது.

## தனியார் பஸ் சாரதிகளிடம் வீதி அனுமதிப்பத்திரம் சோதனை

### அடுத்தமாதம் முதல் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் ஆரம்பத்திலிருந்து தனியார் பஸ் சாரதிகளி டம் வீதி அனுமதிப்பத்திரம் சோதனை செய்யப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் பஸ் சாரதிகள் வீதிஅனுமதிப்பத்திரம் இன்றி பஸ்களை அடுத்த மாதம்முதல் செலுத்தமுடியாது. இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகின்றது.

வீதி அனுமதிப்பத்திரம் இன்றி தனியார் பஸ் செலுத்து பவர்கள் மீது, பொலிஸார் மூலமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

எனவே தனியார் பஸ் சாரதிகள் வீதி அனுமதிப்பத்திரங்க ளைப் பெற்றுக்கொண்டு பஸ்களை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## சுகாதாரசேவையாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம்!

(கொழும்பு)

சுகாதார சேவையாளர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட மூன்று மாகாணங்களில் சுகாதார ஊழியர்கள் மேற்கொண்டுவரும் இருநாள் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அவர்களது அதிகரிக்கப்பட்ட சம்பளத் தொகையை வழங்குமாறு, சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா மூன்று மாகாண ஆளுநர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், திறைசேரி நிதியை ஒதுக்கினால் மட்டுமே, இந்த சுகாதார ஊழியருக்கான அதிகரித்த சம்பளத்தை தன்னால் வழங்கமுடியும் என, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரான ஆர்.எம்.பி இரத்னாயக்கா தெரி வித்தார்.

சுகாதார ஊழியர்களின் இந்த இருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு உரிய பலன் கிடைக்காவிட்டால், எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் நாடளாவிய ரீதியில், தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கவிருப்பதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (07)

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## புவியியல்

## மாதிரி வினாத்தாள்

### புவியியல் II
### சூழல் மூலகங்களும் முகாமைத்துவமும்.

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்க.

1. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் வெப்பம் குறைந்த கோள்.
   (1)வெள்ளி (2)யுரேனஸ் (3)புவி (4)புதன்

2. சூரியன் மகரக்கோட்டில் உச்சம் கொடுப்பது.
   (1)பங்குனி 21 (2)புரட்டாதி 23 (3)மார்கழி 21 (4)ஆனி 21

3. ஆண்டு முழுவதும் உகைப்போட்டத்தின் மூலம் மழையைப் பெறும் பிரதேசங்களின் சரியான தொகுதி
   (1)பிரிட்டிஷ்கொலம்பியா ,தெற்குசிலி ,குவாஸ்கோவடிநிலம்
   (2)குவாஸ்கோவடிநிலம், அமேசன்வடிநிலம், தரீம்வடிநிலம்
   (3)கொஸ்கோவடிநிலம், பிரிட்டிஷ்கொலம்பியா, தரீம்வடிநிலம்
   (4)அமேசன் வடிநிலம், கொஸ்கோவடிநிலம்,கிழக்கிந்தியத்தீவுகள்.

4. அமுக்கவிசை காரணமாக நேர்மாறாக்கிய பிளவுகள் ஏற்படுத்தும்போது மேல் நோக்கித்தள்ளப்பட்ட பாறைக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது.
   (1)தக்கணமேட்டுநிலம் (2)மெசற்றோமேட்டுநிலம். (3)அன்ரீம் மேட்டுநிலம்.
   (4)கயானா மேட்டுநிலம்.

5. உயிர்ச்சூழல் ஒழுங்கு என்பது
   (1)சூழல் தொகுதிகளிலுள்ள உயிரினங்களின் வாழ்க்கை வட்டம்
   (2)புவியமைப்பின் பல்வேறுபட்ட கூறுகள் மேற்கொள்கின்ற வாழ்வுச்சிக்கல்
   (3)உயிருள்ள, உயிரற்ற கூறுகளுக்கிடையேயுள்ள இடைவினைத் தொடர்பு
   (4)சூழல் தொகுதிகளுக்கும் உயிரினத்தொகுதிகளுக்குமிடையிலான சக்திப்பரிமாற்ற ஒழுங்கு.

6. கொழும்பில் காலை எட்டு மணியாக இருக்கும்போது எந்த நெட்டாங்கில் மு.ப ஒரு மணியாக இருக்கும்.
   (1) 75 பாகை கிழக்கு (2) 170 பாகை மேற்கு
   (3)170 பாகை கிழக்கு (4)155 பாகை கிழக்கு

7. உயிரின மண்டலப் பேரழிவுப்பகுதியாகக் கருதப்படும் ஆசியக் கடல்
   (1)சாக்கடல் (2)ஏரல்கடல் (3)கருங்கடல் (4)கஸ்பியன்கடல்

8. மண்ணின் நிறம் செம்மஞ்சள் நிறமாயிருப்பதற்கு காரணம்.
   (1)இரும்புத்தாதுவின் சேர்க்கையும் சிறந்த வடிதிறனும்.
   (2)உக்கலும் சேதனைப் பொருட்களும்
   (3)கல்சியம் காபேற்று, கல்சியம் காபனேற்றின் சேர்க்கை
   (4)விலங்குகளின் அசேதனப் பொருட்களின் சேர்க்கை

9. புவியியல் நிலையும் புவிச்சரித்திரவியல், தரைத்தோற்றம், காலநிலை மண், என்ற கூறுகளுக்கும் பொதுவான இயல்பு
   (1)மானிடப்பிரதிபலிப்புக்களை தீர்மானிக்கும் காரணிகள்
   (2)பௌதிகசூழலை உருவாக்கும் காரணிகள்
   (3)மனிதனைக் கட்டுப்படுத்தும் பண்பட்டுக்காரணிகள்
   (4)மானிடப்பிரதிபலிப்புக்களின் வெளிப்பாடுகள்

10. மனிதப் பண்பாட்டின் வளர்ச்சியில் தொழிலின் முயற்சியை விருத்தியாகியவை
   (1)சூழல் ஆராய்ச்சி, பண்பாட்டு கூர்ப்பு
   (2)மந்தை மேயடைத்தல், நல்லொழுக்கம்
   (3)சிந்தித்தல், பொருளுற்பத்தி செய்தல்
   (4)நிரந்தரக்குடியிருப்புக்கள், சனத்தொகை வளர்ச்சி

11. ஹிப்போ கிரட்டிஸ், அரிஸ்ரோட்டில், ஸ்ராபோ என்பவர்களுக்குப் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து
   (1)மனிதன் தனது திறமையால் சூழலை மாற்றியமைப்பதை நிலைநாட்டியமை
   (2)காலநிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து இடைவெப்பப்பகுதியை மக்கள் வாழ்க்கைக்கு உகந்ததாகக் குறிப்பிட்டமை.
   (3)கலைக்கூடங்களை அமைத்து சூழலை ஆய்வுசெய்தமை.
   (4)காலநிலை மனிதனது திறமையை பழக்கவழக்கங்களைக் கட்டுப்படுத்துவதை வலியுறுத்தியமை.

12. பின்வருவனவற்றில் தீப்பாறைகளின் தொகுதி
   (1)சலவைக்கல்,சிலோற்றுப்பாறை,கருங்கல்,களிப்பாறை
   (2)படிகப்பார்,களிப்பாறை,சேக்குப்பாறை,சிலேற்றுப்பாறை
   (3)படிக்கப்பார்,டயோறைற்,சிலோற்றுப்பாறை,போரி
   (4)கருங்கல்,டயோறைற்,போபிரி,டொலமைற்

13. கனடா சைபீரியா பிறேசிலிய மேட்டுநிலம் என்பவை
   (1)வெள்ளைச் சமவெளிகள்
   (2)பரிசை நிலங்கள்
   (3)ஆற்றுவடிநிலங்கள்
   (4)உயர்த்தப்பட்ட தாழ்நிலங்கள்

14. சமாந்தரமாகச் செல்லப்படும் இரு அருவிகளுக்கிடையே காணப்படும் தடைகளை அருவிகள் அரித்து ஒன்றாக இணையும் செயன்முறை
   (1)குறுக்குச்சீர் இயக்கம்
   (2)ஈராற்றிடை நிலம் உருவாகுதல்
   (3)நீரரி பள்ளங்கள் உருவாகுதல்
   (4)உடைவுகளுக்கூடாக நீர் புகுதல்

15. பிரான்ஸ் ,இங்கிலாந்து முன்னைய யூக்கோஸ்லாவியா ஆகிய பிரதேசங்களின் சிறப்பான சுண்ணாம்புப் பாறைப்பகுதிகள்
   (1)சோமசெட் செடர்மெண்டி காசித்து
   (2)யமேக்கா,சோமசெட்,காசித்து
   (3)கெனரக்கி, யமேக்கா,கோசஸ்
   (4)கோசஸ், செடர்மெண்டி,காசித்து

16. இலங்கையில் சாதாரணமாகக் காணப்படும் பாறைக்கல்
   (1)கருங்கல்லிலிருந்து தோன்றிய உருமாறிய பாறை
   (2)சாணோசெற் உருமாற்றம் பெற்றதால் உருவாகியது
   (3)கொண்டலைற் பாறை உருமாறியதால் உருவாகியது
   (4)கேம்பிரியனுக்கு முற்பட்ட பழம்பாறை

17. கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையிலான A4 வீதியில் 100-101 கிலோமீற்றருக்கிடையில் ஓர் இடம் நீர் மூழ்கியுள்ளது எனத்தரப்பட்டால் நீரில் மூழ்கியுள்ள பகுதி
   (1)நுவரெலியா (2)இரத்தினபுரி (3)மொனராகலை (4)கேகாலை

18. டேவிஸின் தின்னல் வட்டத்தின்படி தரைத்தோற்றங்கள்
   (1)அமைப்பு, தரைத்தோற்றம்,செய்முறை என்பவற்றின் விளைவு
   (2)காலம்,தரைத்தோற்றம், செய்முறை என்பவற்றின் விளைவு
   (3)அமைப்பு,செய்முறை,காலம்,என்பவற்றின் விளைவு
   (4)காலம்,இடம்,புவிச்சரிதவியல்,என்பவற்றின் விளைவு

செல்வி.ப.கந்தசாமி B.A. (Hons) Geo .spl.dip-in-edu
கொக்குவில் இந்துக் கல்லூரி

### புவியியல் II(சூழற் புவியியல்)




22. மேற்படி பிரிதளச் சூறாவளியின் தோற்றத்தினை விளக்கும் படங்களில் அதன் தோற்ற ஒழுங்கினைச் சரியாகக் காட்டும் விடை
   (1). 3,5,4,1,2 (2).2,3,1,4,5 (3) 5,1,3,4,2 (4)4,3,2,1,5

23. முனைவு முகப்புக்கள் உருவாதல், மறைப்பு முகப்பு உருவாதல், மறைப்பு முகப்புக் குழம்புதல் ஆகிய செயற்பாடுகளை விளக்கும் சரியான ஒழுங்கு
   (1)1,4,5 (2) 3,4,5 (3) 1,4,3 (4) 4,3,1

24. உவராதல் ஏற்படுவது
   (1) வறண்ட பகுதிகளில் (2) சுண்ணக்கற் பிரதேசங்களில்
   (3) கரையோரங்களில் (4) கழிவு நீர் சேர்வதனால்

25. உயிரினத் தொகுதியின் மூன்று உயிரினக் கூறுகளாவன
   (1) தாவரங்களும், மண்ணும், விலங்கினமும்
   (2) தாவர உண்ணிகளும், மண்ணும், விலங்கினமும்
   (3) மண்ணும், சாய்வும், தாவரங்களும்
   (4) தாவரங்களும், விலங்குகளும், பிரிகையாக்கிகளும்

26. பின்வருவனவற்றுள் எக்கூற்று இலங்கையில் லா-நினா (LA-NINA) வினால் ஏற்படும் பாதிப்பைத் தருகிறது
   (1) கரையோரங்கள் அரிக்கப்படுதல்
   (2) கடும் வரட்சி ஏற்படுதல்
   (3) கரையோரச் சமவெளிகள் சார்ந்து கடும் வெள்ளப்பெருக்குத் தோன்றுதல்
   (4) கரையோரச் சமவெளிகள் உவராதல்

27. "எமது பொதுவான எதிர்காலம் " என்ற கூற்றை பிரதானமாகக் கொண்டது
   (1) புறூண்லண்ட் ஆணைக்குழு மாநாடு (2) றியோ-செயற்திட்டம் -21
   (30 ஐ.நா. சூழற்திட்ட அறிக்கை (4) பாலிப் பிரகடனம்

28. வளியை மாசுபடுத்தும் இயற்கைக் காரணிகளைச் சரியாகத் தருவது
   (1) நிலச்சரிவு, புவிநடுக்கம், மண்சரிவு
   (2) மின்னல், மழைவீழ்ச்சி, மண்சரிவு
   (3) காட்டுத்தீ, மின்னல், எரிமலை வெடிப்பு
   (4) வரட்சி, சூறாவளி, மழைவீழச்சி

29. வட அமெரிக்காவின் இடைவெப்பப் புல்வெளி
   (1) பம்பாய் (2) பிறேயரிஸ் (3) ஸ்ரெப்பீஸ் (4) டவுன்ஸ்

30. இயற்கையில் மீதேனை வெளியேற்றும் செய்முறைகளாக
   (1) சதுப்பு நிலங்களும், அசைபோடும் விலங்குக் கழிவுகளும்
   (2) நெற்காணிகளும், சதுப்பு நிலங்களும்
   (3) வீதிகளும், புற்றரைகளும்
   (4) விளையாட்டு மைதானங்களும், பாறைகளின் மேற்பரப்பும்

31. "ரம்ஸா" உடன்படிக்கையினால் பாதுகாக்கப்படுவது
   (1) ஈரநிலங்கள் (2) உயிர்ப் பல்வகைமை (3) மழைக்காடுகள்
   (4) கரையோரங்கள்

32. மொன்றியல் உடன்படிக்கையால் கட்டுப்படுத்தப்படும் வாயுப்பயன்பாடு
   (1) ஒட்சிசன் (2) ஹீலியம் (3) எல்.பி.காஸ்(L.P.GAS)
   (4) CFC

33. இலங்கையில் மண்ணரிப்பைத் தூண்டும் பயிர்செய்கை
   (1) கோப்பி (2) இறப்பர் (3) புகையிலை (4) தென்னை

34. சியாட்டில் கூற்று கூறுவதாவது
   (1) மனிதன் புவிக்குரியவன்
   (2) புவி மனிதனுக்குரியது
   (3) செவ்விந்திய மக்கள் பாதுகாக்கப்படவேண்டும்
   (4) இயற்கை வளங்களை மனிதன் போதியளவு பயன்படுத்தலாம்

35. இலங்கையின் பிரதான வன விலங்குச் சரணாலயங்களாவன
   (1) வில்பத்து, அகுங்தல
   (2) அகுங்தல, அளுத்கம
   (3) யால,குமண
   (4) மாதுறு ஓயா, சோமாவதிய

36. அயன மழைக் காட்டழிவு இடம்பெறும் பிரதான பகுதிகள்
   (1) தென்னாசியா (2) தென்கிழக்காசியா (3) மத்திய ஆபிரிக்கா
   (4) இலத்தீன் அமெரிக்கா

37. உலக சுற்றுப்புறச் சூழல் தினம் கொண்டாடப்படுவது
   (1) செப்ரெம்பர் 24 இல் (2) யூன் 5 இல் (3) மார்ச் 8 இல்
   (4) டிசம்பர் 5 இல்

38. சூழற் பாதுகாப்பின் பிரதான அணுகுமுறைகளாவன
   (1) வர்த்தக, பொறியியல், பொறிமுறை அணுகுமுறைகள்
   (2) வர்த்தக, மருத்துவ, உயிரியல் அணுகுமுறைகள்
   (3) பொறியியல், தொழில்நுட்ப, உயிரியல் அணுகுமுறைகள்
   (4) தொழில்நுட்ப, கல்விசார், உயிரினவியல் அணுகுமுறைகள்

39. 2002 இல் உலக சூழல் மாநாடு நடைபெற்ற இடம்
   (1) நியூயோர்க் (2) வியன்னா (3) ஜெனோவா (4) ஜொகன்னஸ் போர்க்

K.கிரிதரன் B.A(Hons),Geo,spl

(தொடரும்...)

# பிரேசில் சுகாதார திணைக்களத்தில் பெருமளவு நிதி மோசடி அம்பலம்



பிரேசில் நாட்டு சுகாதார திணைக்களத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளமையை கண்டுபிடித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து பிரேசிலுக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரத்தத்திலேயே இம் மோசடி மேற்கொள்ளப்பட்டதெனவும், இதனை அரச ஊழியர்களே மேற்கொண்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடி தொடர்பாக பிரேசிலின் மூன்று நகரங்களிலிருந்து 14 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர். பிரேசில் அரசாங்கத்தின் தகவலின் படி 637 மில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தத்தை வெளிநாடுகளில் கொள்வனவு செய்வதற்கு அதிகளவு பணம் தேவைப்பட்ட நிலையில், ஏற்பட்ட சந்தேகத்தையடுதது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே இந்த மோசடி தொடர்பான உண்மை வெளியானது.

இந்த மோசடியில் வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், கணக்காளர்கள், ஈடுபட்டிருந்ததும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# ஈராக்கில் திருமண வீடொன்றின் மீது அமெரிக்க ஹெலிகள் ஏவுகணைத் தாக்கு

## 40 பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழப்பு

சிரியாவின் எல்லைப்புறமான மேற்கு ஈராக்கில் திருமண வீடொன்றின் மீது அமெரிக்க ஹெலிகொப்ரர்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 40 ஈராக்கிய பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஈராக்கிய நேரப்படி அதிகாலை 2.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

ஈராக்கின் ரமாடி மாகாண பொலிஸ் அதிகாரியான லெப். கேணல் ஷியாட் அல் ஜபாரி தெரிவிக்கையில் இந்த சம்பவத்தில் 42 முதல் 45 வரையான பொதுமக்கள் இறந்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறு இறந்தவர்களில் 15 சிறுவர்கள், 10 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியரான சலா அல் அனி 45 பொதுமக்களின் சடலங்கள் வைத்தியசாலையில் இருந்ததாகத் தெரிவித்தார்.

ஆனால், இந்தச் சம்பவத்தில் இறந்தவர்கள் வெளிநாட்டுத் தீவிரவாதிகள்ளனவும் அவர்கள் இருந்த வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவத் தரப்பு தெரிவித்தது.

திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அந்த சந்தோஷத்தை கொண்டாடும் முகமாக துப்பாக்கியால் வானை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இவ்வாறு இவர்களால் வானை நோக்கி வேட்டு தீர்க்கப்படும்வேளை அமெரிக்க ஹெலிகொப்ரர் ஒன்று வான் வழியாகச் சென்றுள்ளது.

தம்மீதே தாக்குதல் நடத்தப்படுவதாக நினைத்த ஹெலிகொப்ரரில் சென்ற அமெரிக்கப்படையினர் திருமண நிகழ்வு இடம்பெற்ற வீட்டின் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனாலேயே இந்த துயர சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாக்தாத்தின் மத்திய பகுதியிலுள்ள இரண்டு நகரங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலொன்றில் எட்டு இஸ்லாமியத் தீவிரவாதிகளை தாம் கொன்றுள்ளதாக அமெரிக்கப்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், நஜாப் நகரில் அமெரிக்கப்படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் ஒரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதோடு மூன்று படையினர் காயமடைந்தனர். இதேவேளை ஸ்பெயின் படையினரின் ரோந்து அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு படைவீரர் காயமடைந்தார்.

## இஸ்ரேலிய நீதிமன்றினால்

# பலஸ்தீன குழுவின் சிரேஸ்ட தலைவரொருவர் குற்றவாளியென இனங்காணப்பட்டுள்ளார்

பலஸ்தீன அல் அக்சா மாட்டியர்ஸ் குழுவின் சிரேஷ்ட தலைவரான மார்வன் பார்கோரி 26 கொலைகளைப் புரிந்துள்ளார் எனத் தெரிவித்து இஸ்ரேலிய நீதிமன்றம் அவரை குற்றவாளியென இனம் கண்டுள்ளது.

ஆனால், நீதிமன்றின் இந்த முடிவை நிராகரித்த மார்வன் - ஒரு இனத்தின் எழுச்சிக்காகப் போராடுவது ஒருவரின் பிறப்புரிமை எனத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தின் வருங்காலத் தலைவராக வருவதற்கு மார்வனுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் மார்வன் பலஸ்தீன ஜனாதிபதி யாசிர் அரபாத்தின் பாத் கட்சியில் இணைந்து செயற்பட்டு பலஸ்தீனம் மீதான இஸ்ரேல் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடியிருந்தார்.

கிபுறு மொழியில் நன்கு உரையாடக்கூடிய மார்வன், இஸ்ரேலிய பலஸ்தீன சமாதான முயற்சியையும் வரவேற்றிருந்தார். இதனால், இஸ்ரேல் - பலஸ்தீனங்களுக்கிடையில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இவர் பங்காற்ற இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் கருதப்பட்டிருந்தது.



இதேவேளை, இஸ்ரேல் நீதிமன்றம் மார்வன் மீது குற்றவாளியெனத் தெரிவித்துள்ளமையானது அவர் மீதான செல்வாக்கை அதிகரிக்கலாமென தெரிவிக்கப்பகிறது.

# இத்தாலியப் பிரதமர் அமெரிக்கா பயணம்

ஈராக்கிலுள்ள இத்தாலிய படைகளின் நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் கலந்துரையாடுவதற்க்கு இத்தாலியப் பிரதமர் பேர்லுஸ் கோனி அமெரிக் காவுக்குச் சென்றுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டனுக்கு அடுத்தபடியாக ஈராக்கில் மூன்றாவது பெரிய படையாக இத்தாலியப் படைகளே உள்ளன. ஈராக்கில் சுமார் 3000 இத்தாலியப் படைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இத்தாலிய நகரான வெனிஸில் முதன் முதல் ஈராக்கில் உயிரிழந்த இத்தாலியப் படை வீரரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

இதேவேளை, ஈராக்கிற்கு படைகள் அனுப்பப்பட்டதனை இத்தாலி நாட்டின் பெரும்பாலானவர்கள் எதிர்த்து வருகின்றனர். இதனால், பிரதமர் சில்வியோவிற்கு எதிராக உள்நாட்டில் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயரைப் போலவே அமெரிக்க அதிபர் புஷ்ஷும் இத்தாலியப் பிரதமருக்கு நெருங்கிய நண்பராவார்.

ஈராக் தொடர்பான பிரச்சினைகளை விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் கையளிப்பதற்கு இத்தாலியப் பிரதமர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.



இதன்மூலம் ஜுன் 30இல் ஆட்சி அதிகாரங்கள் ஈராக்கியர்களிடம் வழங்கப்படும்போது, ஈராக்கில் உள்நாட்டுப் போரை தவிர்க்க முடியுமென கருதப்படுகிறது.

இதேவேளை, இத்தாலிய இடதுசாரிக் கட்சி அதிபர் புஷ்ஷிற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை அடுத்தமாதம் 4 ஆம் திகதி நடத்தவுள்ளது.

அடுத்தமாதம் ஐரோப்பிய யூனியனுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கு எதிராக நடாத்தப்படவுள்ள எதிர்ப்பு ஊர்வலம் மிகவும் மலினத்தனமானதென இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## சீனாவுடனான உறவை

# பலப்படுத்தப் போவதாக தாய்வான் ஜனாதிபதி தெரிவிப்பு

தாய்வான் ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்.ஆய்.பியான் நேற்று நடந்த பதவியேற்ற பின்னான உரையில் -சீனாவுடனான தமது நாட்டு உறவுகளைப் பலப்படுத்தப் போவதாக தெரிவித்தார்.

சீனாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதற்கு அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாய்வானின் அரசியலமைப்பில் மாற்றங்கள் மேற்கொள்வதற்கு தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் எவ்வித பிழைகளும் இருக்கவில்லையெனவும், அது மிகச் சரியான நடவடிக்கை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தாய்வானில் ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு அந்த நாட்டின் விருப்பத்திற்கு சீனா மதிப்பளிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

தாய்வானில் தற்போதுள்ள அரசியலமைப்பு மிகப்பழமை வாய்ந்ததெனவும், இதனால் அதனை மாற்றுவது அவசியமானதெனவும் இவ்வாறு அரசியலமைப்பை மாற்றுவதன் மூலம் தாய்வானில் ஜனநாயகத்தை மேம்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு மாற்றத்தில் தாய்வானின் இறைமை தொடர்பாக எதுவும் குறிப்பிடவில்லை எனவும் கூறியுள்ளார்.

இதனிடையே தாய்வானை ஒரு சுதந்திர நாடாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தையும் தான் தடுக்கப்போவதாக சீனா







அறிவித்துள்ளது.

இவ்வாறு, தாய்வானின் சுதந்திர நாடு தொடர்பான முயற்சிகளைத் தடுக்கும் போது தனது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புக்களையோ மற்றும் அமெரிக்காவுடனான உறவில் ஏற்படும் மாற்றங்களையோ கவனத்தில் எடுத்துக்கொள்ளப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த முடிவிற்கு அமெரிக்கா தனது கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

# பிரதமராகும் மன்மோகன்சிங்கிற்கு சொந்தம் கொண்டாடும் இரு மாநிலங்கள்

இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவி ஏற்கும் மன்மோகன்சிங்குக்கு அவர் பிறந்த பஞ்சாப் மாநிலமும், நேசக் கரம் நீட்டிய அசாம் மாநிலமும் வாழ்த்துத் தெரிவித்துள்ளன.

ஒன்றுபட்ட இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 'கா' என்ற சிறிய கிராமத்தில் மன்மோகன்சிங் பிறந்தார். இப்போது அந்த ஊர் பாகிஸ்தானில் உள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த அவர் பெரும்பாலும் ஹோட்டல்களிலும், அரசு விடுதிகளிலும் தங்கி வந்தார்.

1991ஆம் ஆண்டு நரசிம்மராவ் அமைச்சரவையில் நிதி அமைச்சராக மன்மோகன்சிங் பொறுப்பேற்றார். அவர் நாடாளுமன்றத்திலோ, டெல்கி மேல்சபையிலோ உறுப்பினராக இல்லை. அப்போது அவர் அசாம் மாநிலத்தில் இருந்து டெல்கி மேல் சபை உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டார். அசாமில் நிரந்தர வீடு இல்லாததால் அவர் போட்டியிட அப்போதைய தலைமை தேர்தல் கமிஷனர் எடி.என்.சேஷன் எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால், அசாம் முதலமைச்சராக இருந்த சைக்கியா, மன்மோகன்சிங்குக்கு நேசக்கரம் நீட்டினார்.

கவுகாத்தியில் உள்ள நந்தன்



நகரில் ஒரு வீட்டை ஒதுக்கி அவருக்கு அதை நிரந்தர முகவரி ஆக்கினார். இதைத் தொடர்ந்து அசாம் மாநிலத்தில் இருந்து டெல்கி மேல் சபைக்கு மன்மோகன்சிங் 2 முறை தேர்ந்து எடுக்கப்பட்டார்.

மன்மோகன்சிங்குக்கு நிரந்தர முகவரி கொடுத்த அசாம் மக்கள் அவர் பிரதமர் ஆவதை முகமலர்ச்சியோடு வரவேற்கிறார்கள்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில், சிறுபான்மை இனமாகிய சீக்கிய இனத்தைச் சேர்ந்த மன் மோகன் சிங் முதல் முறையாக பிரதமராக இருப்பதை அவர் பிறந்த மாநிலமான பஞ்சாப் பெருமையுடன் வரவேற்கிறது.

# பலஸ்தீன மக்களின் படுகொலை ஐ.நா பாதுகாப்புச் சபை கண்டனம்

காசாப்பிரதேசத்தில் கொல்லப்பட்ட பலஸ்தீன மக்களுக்காக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை பிரேரணை ஒன்றின் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இஸ்ரேலிய படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பலஸ்தீ னர்கள் கொல்லப்பட்டும் 60 பேர் வரை காயமடைந்துமிருந்தனர். சர்வதேச சட்டங்களுக்கு மாறாகவே பலஸ்தீனக் குடியிருப்புக்கள் அழிக்கப்படுவதாகவும் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா வழமையாக இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரேரணைகளுக்கு 'வீட்டோ' அதிகாரத்தை பாவித்து தடை செய்து வந்துள்ளது. ஆனால், இம்முறை வாக்களிப்பில் பங்குகொள்ளவில்லை. ஆனால் கண்டனங்களை தெரிவித்தள்ளது. வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்லிவன் தெரிவித்த கருத்தில் தனது குடிமக்களை பாதுகாப்பதற்கு இஸ்ரேலுக்கு உரிமையுண்டு. ஆனால் காசாவில் நடத்தப்பட்ட தாக்குதல் பாதுகாப்பிற்கும், சமாதானத்திற்கும் வழி வகுக்காதெனத் தெரிவித்துள்ளார். இதேவேளை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் இஸ்ரேலியப் பாதுகாப்பு படையினரின் போர் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை பாதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கைதிகளைப் பார்வையிட்டனர்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வெலிக்கடை மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளுக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளைப் பார்வையிட்டனர்.

நேற்று காலை 11 மணியளவில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் ஆகியோர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் பெண் கைதிகளைச் சந்தித்து சிறையின் நிலவரம், அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.

தொடர்ந்து நேற்று மாலை களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்ற அவர்கள் - கைதிகளோடு கலந்துரையாடியதுடன் சிறை நிலவரம் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(வி)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இயன்மாட்டினுடன் பேச்சு!

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகர் இயன மாட்டினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கொழும்பிலுள்ள விடுதியொன்றில் நேற்றுக்காலை 9 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 10 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் தமிழ்மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்டு வரும் கெடுபிடிகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இலங்கை அரசின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளே தமிழ்மக்கள் போராடக் காரணமாய் அமைந்தது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இறுதிக்கட்ட...

இதேவேளை, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான திகதி மற்றும் இடம் ஆகிய விடயங்களை இறுதியாக தீர்மானிக்கவே சொல்ஹெய்ம் இலங்கை வரவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசிற்கும், புலிகளுக்கும் இடையிலான முதற்கட்ட சமாதானப் பேச்சுக்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறலாம் எனவும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடல்...

அல்லது வசந்தன் (வைரமுத்து வினோகரன், சொந்த முகவரி - நாக கொட்டியான், உமையாள்புரம், ஆனையிறவு, தற்போதைய முகவரி - வடிசாலை அருகில், ஆனைவிழுந்தான், வன்னேரி - கிளிநொச்சி)

ஆகியோரே வீரச்சாவடைந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

## முல்லைத்தீவு...

இதேவேளை, கடற்படைப் படகு இது ஒரு விமானம் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இந்த வான்கலம் பயணம் செய்த வேகம் மற்றும் பயணம் செய்த இடம் என்பவற்றைக் கொண்டு இது ஒரு விமானமாக இருக்கலாமென கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டனர்.

இதேவேளை, குறிப்பிட்ட நேரத்தில் எந்தவொரு விமானப்படை விமானமும் அப்பகுதியில் பறக்கவில்லை என்று விமானப்படையினர் உறுதிசெய்தனர்.

இதனால் புலிகளின் இரணைமடு ஓடு பாதையில் இருந்து புறப்பட்ட விமானமே பரீட்சார்த்த பறப்பில் ஈடுபட்டதாக சந்தேகம் வெளியிடப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரணைமடு குளத்துக்கு கிழக்காக விமான ஓடுபாதை ஒன்றை தாம் அமைத்திருப்பதை புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வன் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயிடம் ஒப்புக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதெனவும் அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஐரோப்பிய...

பிரச்சினைக்கு இறுதித் தீர்வை அடையும் வகையிலான பேச்சுக்களை ஆரம்பிக்க விருப்பம் வெளியிட்டுள்ளார்.

ஆனால், புலிகள் முதலில் இடைக்கால தன்னாட்சி குறித்தே பேசுவதற்கு தயாராகவுள்ளனர். விடுதலைப் புலிகள் பலமான இராணுவத்தை மாத்திரம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்டிருக்கிறார்கள்.

எனவே - இடைக்கால தன்னாட்சி அதிகாரம் ஒன்றின் மூலமே, வடக்கு - கிழக்கில் அவர்களால் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

பெரும்பாலும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இலங்கையில் பேச்சுக்கள் நடக்காமல் வெளிநாடுகளில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் எனக் கேட்டுள்ளோம். சந்திரிகா குமாரதுங்கவின் சிறுபான்மை அரசாங்கம் சிங்கள தீவிரவாத, தேசியவாத கட்சிகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும், புலிகள் அமைப்பு 2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை உரிய முறையில் கடைப்பிடித்து வருகிறது. சிங்கள தேசியவாதிகளின் பிரச்சினையை அரசாங்கமே தீர்த்துக் கொள்ளவேண்டும்.

பெரும்பாலானோர் நினைப்பது போல தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு செல்லப் போவதில்லை. விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் முழுமை நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - புலித்தேவனின் இந்தப் பேட்டி தொடர்பாக கருத்து வெளியிட்ட ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பில் திறந்த நிலைப்பேட்டியளித்திருப்பது இதுவே முதல் தடவை என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தாயார் கண்டித்ததால்

# ஏழு வயதுச் சிறுவனொருவன் பூச்சிநாசினி அருந்தி தற்கொலை



தாயார் கண்டித்ததையடுத்து ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் பூச்சிநாசினியை அருந்தியதையடுத்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று கரவெட்டியில் இடம்பெற்றது.

குலானை, கரவெட்டி மத்தி கரவெட்டியைச் சேர்ந்த பூபாலசிங்கம் அனோஜன் (வயது 7) என்ற சிறுவனே நேற்றுமுன்தினம் காலை பரிதாபகரமாக மரணமடைந்தவராவார்.

இது குறித்து தெரியவருவதாவது -

வீட்டில் சகோதரியுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது இருவருக்குமிடையே ஏற்பட்ட சிறிய சண்டையை அடுத்து தாயார் சிறுவனைக் கண்டித்தார்.

இதையடுத்து வீட்டின் பின்புறமாகச் சென்று தந்தையாரால் தோட்டத்திற்கு அடிக்கவென மறைத்து வைத்திருந்த பூச்சி மருந்தை எடுத்து அருந்தினான்.

சிறிது நேரத்தின் பின்னர் சிறுவனைச் சாப்பிட வருமாறு அழைத்த தாயார் சிறுவனின் வாயிலிருந்து வித்தியாசமான மணம் வருவதை அவதானித்தார்.

இதையடுத்து சிறுவனின் தந்தைக்கு விடயம் விளங்கியதும் சிறுவனை மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். எனினும், காலை 7.30 மணியளவில் சிறுவன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர்கள் எவரும் கடமையில் இருக்கவில்லை.

எனினும், பின்னர் சிகிச்சையளிக்கப்பட்ட போதும் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

சிறுவனின் சடலம் வைத்திய பரிசோதனையின் பின்னர் அவனது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(12)

## சிப்பாய் தற்கொலை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

மூதூரிலுள்ள இராணுவ முகாமில் பணியாற்றிய சுகந்த சமன்குமார (வயது 19) என்ற சிப்பாயே நேற்று முன்தினம் காலை தனது துப்பாக்கியால் கழுத்தில் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

## காணாமற்போன...

தக் கப்பல் மீளவும் பாதுகாப்பாக சிங்கப்பூருக்கே திரும்பிச் சென்று விட்டதாகவும் தமக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்தே தேடுதலைக் கைவிட்டதாகவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் கட்டப்பட்ட 'நிக்ஸி' என்ற இந்தக்கப்பல் மொரோக்கோவுக்கும்- ஸ்பெயினுக்கும் இடையிலான போக்குவரத்துக்காக வழங்கப்பட்டது.

536 பயணிகளையும் 100 வாகனங்களையும் ஏற்றக் கூடிய இந்தக் கப்பல் 18 மில்லியன் அமெரிக்க டொலர்பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அணுகுமுறை மாறவேண்டும்

### பி.பி.சி பேட்டியில் வைகோ

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறை மாற்றப்படவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெறுவதற்கு - நோர்வே அரசின் முயற்சிகளுக்கு இந்தியா தனது பங்களிப்பை செய்யவேண்டும் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் -

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் இருக்கின்றனர் என்பதை இன்றைக்கு சர்வதேச சமூகம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறையில் ஒரு மாற்றம் வேண்டும். பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு நோர்வே அரசின் அனுசரணைக்கு இந்தியா தனது பங்களிப்பைச் செய்யவேண்டும்.

அமெரிக்க நாடு இலங்கையில் காலூன்ற நினைக்கும் இந்த வேளையில், இந்தியா தன்னுடைய பூகோள அரசியலைக் கருத்திற்கொண்டு ஈழத தமிழர் பிரச்சினையில் ஆக்கபூர்வமாக பேச்சுவார்த்தை வெற்றிபெற உதவவேண்டும்.

ஈழத்தமிழர் தொடர்பான எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை. ஈழத்தமிழருக்கு ஒரு விடியல் ஏற்படவேண்டும். அவர்களுடைய துயரத்துக்கு முடிவு ஏற்படவேண்டும். உரிமையுள்ள மக்களாக நிம்மதியாக அவர்கள் வாழவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தூய ஆவியின் வருகைக்காக
ஆயத்தம் செய்யும்
இறை தியான புதுவாழ்வு வழிபாடு
கொழும்பிலிருந்து
சகோதரன் சாள்ஸ் தலைமையில்
பல குருக்கள் பொதுநிலையினர்
ஐம்பதுக்கு மேற்பட்ட இசைக்கலைஞர்களுடன்
நவீன இசைக்கருவிகளோடும் நவீன ஒலி அமைப்போடும்
உங்களுக்காக செபிக்க வருகிறார்கள்.



நாளை 22.05.2004
சனிக்கிழமை
மாலை 7 மணி முதல் 10 மணிவரை
யாழ்.மரியன்னை பேராலய திறந்த வெளியரங்கில்
இன்னிசை மழையில் நனைந்து இறைவார்த்தையைக் கேட்டு இறை அனுபவம் பெற்று புதுவாழ்வு காண திரண்டு வாருங்கள்.



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இறைதியான குழுவினர்
தூய ஆவி திருவிழிப்பு ஆராதனை
29.05.2004 சனி இரவு 8 மணிமுதல் அதிகாலைவரை
யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில்
ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.